# விடுதலைப்புலிகள்

குரல் 95 ஆடி - 2000 அன்பளிப்பு 5/-


உள்ளே


- பயனற்ற முயற்சி
- ஆட்சி மாறினாலும் மாறாத இனவெறி அரசியல்
- ஆட்டம் காணும் ஆக்கிரமிப்பு இராணுவத்திற்கு.
- இறங்கப்போகும் சிங்கக் கொடிக்கு இசைக்கப்பட்ட முகாரி
- அதிர்ச்சிநோய் எமக்கல்ல
- சிப்பாய்களும் மன்னர்களே
- உலைக்களம்


# போரில் இயலாமை அரசியல்தீர்வில் நாட்டமின்மை

# அதளபாதாளநிலையை நோக்கி சிங்களஅரசு

ஓயாத அலைகள் -3 படைநடவடிக்கையை புலிகள் ஆரம்பித்து சுமார் 08 மாதகாலம் வரையிலும் சிங்களப்படைகளால் ஒரு வலிந்த தாக்குதலை புலியணிகள் மீது நடாத்த முடியவில்லை. தற்காப்புச் சண்டைகளை மட்டுமே நடாத்த வேண்டிய இக்கட்டான இராணுவ சூழலில் சிங்களப்படை இருந்தது.

எட்டுமாதங்களின் பின் மணலாறு, நாகர்கோவில், அரியாலை, நாவற்குழி என நான்குமுனைகளில் - இழந்த நிலத்தைக் கையகப்படுத்தும் ஆசையுடன் - சிங்களப் படையினர் வலிந்ததாக்குதல்களை நிகழ்த்தியிருந்தனர்.

எனினும், படையினரின் நான்கு வலிந்ததாக்குதல்கள் மீதும் புலிவீரர்கள் முறியடிப்புத்தாக்குதல்களை தொடுத்து படையினரை முன்னைய இடங்களுக்கு விரட்டியடித்து - அவர்களின் தாக்குதல்களை முறியடித்துள்ளனர்.

இவ்விதம், வடபுலப்போர்முனையில் நடைபெறும் மரபுவழிச் சண்டைகளில் படையினர் பலத்த இராணுவத்தோல்விகளைச் சந்தித்தபடியிருக்கும் அதேவேளை; கிழக்குப் போர்முனையில் புலிவீரர்களின் கரந்தடித்தாக்குதல்களினால் சிங்களப் படையினர் கணிசமான அழிவுகளையும் - ஆயுதஇழப்புக்களையும் சந்தித்துவருகின்றனர்.

சிங்களப்படையுடன் ஒப்பிடும்போது எண்ணிக்கையில் குறைந்த புலிப்படை, எண்ணிக்கையிலும் - ஆயுத பலத்திலும் அதிகமான சிங்களப் படை நிலைகள்மீது தாக்குதல் நடாத்தி அவற்றை வெற்றிகொள்வதும்; வென்றுமீட்ட நிலங்களில் புலிவீரர்கள் நிரந்தரமாக நிலைகொள்ளும்போது அதை முறியடிக்கமுடியாத இராணுவஇயலாமையுடன் சிங்களப்படைகள் தவிப்பதுமாக இன்றைய களயதார்த்தம் உள்ளது.

ஒரு கட்டத்தில் குடாநாட்டுப்படையைப் பாதுகாக்க உலகநாடுகளின் உதவியை சிங்கள அரசு இரந்து கேட்ட இராணுவஅவமானத்தையும் சிங்களதேசம் அனுபவித்துவிட்டது. குடாநாட்டுப் படையின் இருப்பு அதற்கு அபாயம் நிறைந்ததாகவே இன்றும் உள்ளது.

புலிகளை ஒடுக்குவதற்காக எந்தப்பேய்களிடமும் உதவிகோருவேன் என, அன்று, ஜே. ஆர். ஜெயவர்த்தனா கூறியிருந்தார்,

புலிகளிடமிருந்து குடாநாட்டுப் படையைப் பாதுகாப்பதற்காக எந்தப் பேயிடமும் உதவிகோரும் நிலையில் சந்திரிகா அம்மையார் இன்றுள்ளார்.

இவ்விதம் தனது தேசியகௌரவத்தை அடகுவைத்தாவது புலிகளுடன் போர்புரியவேண்டிய இராணுவஇயலாமையுடன் சிங்களப்படை உள்ளது.



தமிழர்தலைவன்: ஓயாத அலைபெருக்கி சிங்களத்தார் போர்மனதை கிலிகொள்ளவைத்த அலைமூலம்!

புதிய ஆயுதங்களைக் கொள்வனவு செய்தும்; ஆள் எண்ணிக்கையை மேலும் அதிகரிக்கச் செய்விக்க புதிதாக படையில் ஆட்களை இணைத்தும்;


ஓடிய படையினருக்கு சலுகைகளை அறிவித்து - ஆசையூட்டி மீண்டும் படையில் இணைக்கவும்;

போர்ச்செலவினத்தை மேலும் மேலும் அதிகரித்தும்;

சிதைந்துபோயுள்ள சிங்கள அரசின் போர் இயந்திரத்தைப் புனரமைப்புச் செய்ய, அரசு முயறிசிக்கின்றது.

இந்த முயற்சியால் சிங்களஅரசு பெரும் பயனைப் பெறப்போவ

( 02 ஆம் பக்கம் பார்க்க )




கருத்தோவியம் கி. ஓவியநாதன் ( போராளி )

# தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடு

www.eelamview.com

# பயனற்ற முயற்சி

தமிழரின் தேசிய விடுதலைப்போராட்டத்தை ஒடுக்கும் இலக்குடன், சிங்கள அரசு, நீண்டகாலமாகக் கடைப்பிடித்துவரும் இராணுவத்தீர்வு என்ற அடக்குமுறைச் சித்தாந்தம் விடுதலைப்புலிகள் இயக்கத்தால் முறியடிக்கப்பட்டுவிட்ட ஒரு இராணுவ விடயமாக மேலோங்கிவருகின்றது.

ஓயாத அலைகள் -3 படைநடவடிக்கை மூலம் வன்னி மற்றும் குடாநாட்டுச் சமர்முனைகளில் புலிகள் பெற்றுவரும் மரபுவழிப்பட்ட சமர்களின் வெற்றிகள் இவற்றை நிரூபித்து வருகின்றன.

மட்டுப்படுத்தப்பட்டளவில் மரபுவழிப் போர்க்கலங்களை வைத்துக்கொண்டும் - குறைந்தளவிலான விநியோக வழிவாய்ப்புக்களைக் கொண்டிருந்தபோதும் புலிகள் இயக்கமானது தான்மீட்ட நிலப்பகுதிகள் எங்கும் முன்னரங்க நிலைகளை அமைத்து மரபுவழிப்போரைத் தொடர்ந்து நடாத்தும் போர்வல்லமையை உலகத்திற்குப் பறைசாற்றிவருகின்றது.

புலிகளின் போர்வலுவைச் சிதைக்கும் எண்ணத்துடன் சிங்கள அரசானது பெரும்பொருட் செலவில் காலத்திற்குக்காலம் ஆயுதப்பெருக்கத்தை அமுல்நடாத்தியபோதும் அது இராணுவத்தோல்விகளையே அனுபவித்துவருகின்றது.

எனினும், மோசமான இந்த இராணுவத் தோல்விகளிலிருந்து பாடம்படிக்க சிறிலங்கா அரசு பிடிவாதமாக மறுத்துவருகின்றது.

அண்மைககாலமாக புலிகள் இயக்கம் ஈட்டிவரும் இராணுவவெற்றிகளுக்கு சிங்களப்படையிடமுள்ள ஆயுதப்பற்றாக்குறையே காரணம் என தன்னிலை விளக்கம் கூறி, ஆயுதப்பெருக்கத்திற்கு ஆணை பிறப்பித்துள்ளது.

பல்குழல் மோட்டார்களை கொள்வனவு செய்து போரில் அற்புதங்களைப் படைத்திட முடியும் என சிங்கள அரசு நம்புகின்றது.

1983ஆம் ஆண்டில் பதினையாயிரம் படையாட்களுடன் இருந்த சிங்கள இராணுவம், 17 வருடகால போரின்விளைவாக ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட ஆளணியைக்கொண்ட இராணுவமாக படைப்பெருக்கம் செய்யப்பட்டும் அதனால் போரில் வெற்றிகளைக் குவிக்கமுடியவில்லை.

Liberation Tigers Of TAMIL EELAM

புலிகளின் குரல்

சாதாரண குண்டுவீச்சு விமானங்களான 'சியாமசெற்றி' களிலிருந்து அதிநவீன மிகையொலி தாரகைகளான 'கிபிர்' சண்டை விமானங்களைக்கொண்ட வான்படையாக உயர்ச்சிபெற்றும் போரில் இராணுவத்தால் மேலாதிக்கம் செலுத்தமுடியவில்லை.

சாதாரண விசைப்படகுகளிலிருந்து பீரங்கிக் கப்பல்கள்வரை சிங்களக்கடற்படை விரிவாக்கப்பட்டபோதும் கடற்போரில் அதனால் சாதனைகளைப் படைக்கமுடியவில்லை.

வருடத்திற்கு சில நூறுகோடி ரூபாய்கள் என்ற நிலையிலிருந்த சிங்கள அரசின் பாதுகாப்புச் செலவீனம் இப்போது வருடத்திற்கு ஆறாயிரம்கோடி ரூபாய்களை எட்டிவிட்டநிலையிலும் புலிகளின் இராணுவ வளர்ச்சியை அதனால் தடுத்துவிடமுடியவில்லை.

ஒற்றைக் குழல்களைக்கொண்ட மோட்டர்களையும் - ஆட்டிலறிகளையும் - டாங்கிகளையும் டசின் கணக்கில் வரிசைப்படுத்தி நிறுத்தி புலிவீரர்கள்மீது சரமாரியாகச் சுட்டும் புலிகளின் தாக்குதல்களைத் தடுக்கமுடியாத சிங்களப்படைகள், இப்போது, பல்குழல்மோட்டர்கள் சிலவற்றைப் பயன்படுத்தி போரில் திருப்புமுனைகளை உண்டுபண்ணிவிடலாம் என சிறுபிள்ளைத்தனமாக நம்புகின்றது.

இந்தப் புதிய ஆயுதங்களைப் பயன்படுத்தி மணலாற்றிலும் - குடாநாட்டிலும் பலமுனைகளில், சிங்களப்படைகள், வலிந்ததாக்குதல்களை நடாத்தியிருந்தும் ஒரு முனையிலாவது அதனால் வெற்றியைப் பெற்றுக்கொள்ளமுடியவில்லை.

இருந்தபோதும், இனப்பிரச்சனைக்கு இராணுவத்தீர்வு என்ற உளுத்துப்போன திட்டத்தைக்கைவிட சிங்களஅரசு மறுக்கின்றது.

புதிய புதிய ஆயுதங்களை வாங்கிக்குவித்து போரை விரிவாக்குவதிலேயே அது காலத்தைக் கழிக்கின்றது.

தோல்விமேல் தோல்வி வந்தாலும், எப்போதாவது ஒருமுறை வெற்றி பெறலாம் என்ற நப்பாசையில் உள்ளதையெல்லாம் இழந்து ஒட்டாண்டியாகும் ஒரு சூதாடியின் மனநிலையிலேயே இன்று சிங்கள அரசு உள்ளது.

போரைவிட்டால் சிங்கள அரசாங்கத்திற்கு வேறுவழியில்லை. போரில் தோல்விகளைக் கண்டுவருகின்றது என்ற உண்மையை ஒப்புக்கொள்ளும் நேர்மையும் - துணிவும் அதற்கு இல்லை.

இதனால், பாரிய இராணுவத்தோல்விகளை சிங்களப்படைகள் சந்திக்கும் வேளைகளில் ஆயுதப்பெருக்கத்தைச்செய்து சிங்கள மக்களை ஏமாற்றிவருகின்றது.

புலிகள் இயக்கத்தினது படைக்கலங்களில் பெரும்பகுதி சிங்களப்படையிடமிருந்து கைப்பற்றப்பட்டவை என்பது எல்லோரும் அறிந்த தகவல்.

சிங்கள- பௌத்த பேரினவாதஅரசு ஆயுதப்பெருக்கத்தின் மூலம் தனக்குத்தானே சவக்குழியைத் தோண்டுகின்றது என்றால் அது மிகையாக இருக்காது.

O

### போரில் இயலாமை...

இல்லை என சிங்கள ஆய்வாளர்களே அரசை மிரட்டியுள்ளனர்.

போரில் சிங்களப்படைகள் சந்தித்துவரும் மோசமான தோல்விகளின் விளைவுகளை சிங்களமக்கள் உணராது தடுப்பதற்கும் -சிங்கள அரசாங்கத்தின் இராணுவ இயலாமையை மூடிமறைக்கும் இலக்குடனும் பத்திரிகைத்தணிக்கையை அரசாங்கம் கடைப்பிடிக்கின்றது.

போர்மூலம் தமிழரின் அரசியல் போராட்டத்தை ஒடுக்கமுடியாது என்பதை களயதார்த்தம் நன்கு உணர்த்திய பின்னர், அரசியல்தீர்வு முயற்சிக்காக புலிகளுடன் சமாதானப்பேச்சுவார்த்தையை நடாத்த வேண்டும் என்று சர்வதேச நாடுகளும் - மனிதாபிமான நிறுவனங்களும் சிங்களஅரசைக் கோரிவருகின்றன.

ஆயினும் அந்த சர்வதேச அபிப்பிராயத்தை சிங்களஅரசு கௌரவிப்பதாகத் தெரியவிலலை. அதற்குப் பதிலாக புலிகளுடன் போர்புரிய உதவுமாறு தனது நட்புநாடுகளுக்கு அது கோரிக்கை விடுத்துள்ளது.

எனினும், மேலைத்தேய நாடுகளிடமிருந்து பொருண்மிய உதவிகளைப்பெறும் நடவடிக்கைகளுக்காக பேச்சுவார்த்தை என்ற தந்திரோபாய நிலைப்பாட்டையும சந்திரிகா அரசு கைவிடவில்லை. அரசியல் தீர்வு முயற்சியில் தனது அரசாங்கம் ஆர்வமாக இருக்கின்றது என உலகிற்குக்காட்டும் முயற்சியிலும் அரசு இறங்கியுள்ளது.



பெண்புலிகளின் குழுமுதல்வர்கள்: பகைவாழும் குகையெல்லாம் புலியணிகள் பாயும்; தீமூழும்!

தமிழரின் அரசியல் பிரதிநிதிகளான புலிகள் இயக்கத்துடன் சமாதானப் பேச்சுக்களில் ஈடுபடமாட்டேன் என முன்னர் அறிவித்து, ஆயுதங்களை புலிகள் கைவிட்டால் அவர்களையும் பேச்சில் இணைத்துக்கொள்வேன் என பின்னர் அறிவித்து, அரசியல்தீர்வு முயற்சியில் அம்மையாருக்கு இருக்கும் "உண்மையான அக்கறையை" பகிரங்கப் படுத்தியுள்ளார்.

போர்விரிவாக்கத்தாலும் - ஆயுதப்பெருக்கத்தாலும் சிங்கள அரசின் பொருண்மியபலம் பெருமளவு சிதைந்துவிட்டது.

அரசபொருளாதாரம் பற்றாக்குறையாகவுள்ளதால் வரி அதிகரிப்பு உட்பட பல்வேறு பொருண்மியச் சுமைகளை சிங்களமக்கள் மீது சுமத்தி ஒரு சமூக - பொருளாதாரப் பிரச்சனையை சந்திரிகா அரசு உருவாக்கியுளதுள்.

படையை விட்டோடிய சிப்பாய்களால் சிங்களசமூகம் பயமுறுத்தப் படுகின்றது என பல்வேறு சிங்கள சமூகவியலாளர்கள் எச்சரிக்கின்றனர். இவர்களின் குற்றச்செயல்களால் சிங்கள சமூகத்தில் கொலைகளும் - தற்கொலைகளும் பெருமளவு அதிகரித்துள்ளன.

சிங்கள அரசு சந்தித்துள்ள இராணுவ - அரசியல் - பொருளாதார நெருக்கடிகளுக்குப் பிரதான காரணம் புலிகளின் இராணுவ பலவளர்ச்சிதான்.

இந்தப் பலவளர்ச்சி இன்னும் வளர்த்தெடுக்கப்படும்போது சிங்கள அரசு முழுமையாகவே ஸ்தம்பித நிலையை அடையலாம்.

அதுவே தமிழரின் அரசியல் இலட்சியம் ஈடேறும் உச்சக்கட்டமாக இருக்கும். O



www.eelamview.com

# ஆட்சி மாறினாலும் மாறாத இனவெறி அரசியல்

ஓயாத அலைகள் -3 படை நடவடிக்கையின் இராணுவ விளைவுகள் சர்வதேச நாடுகளின் சிந்தனைப்போக்கில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தியுள்ளன. புலிகள் இயக்கத்தின் இராணுவ ஆற்றலை - அதற்கிருக்கும் மக்கள் ஆதரவை சந்தேகத்திற்கு இடமின்றி தெரிந்துகொண்டுவிட்டன.

'போர்மூலம் சமாதானம்' என்ற சந்திரிகா அரசாங்கத்தின் அரசியல் நிலைப்பாட்டை சர்வதேசம் இனியும் ஏற்கத்தயாராக இல்லை.

போரை நிறுத்தி அமைதிவழியில் அரசியல் தீர்வுகாண முயற்சிக்குமாறு அவை சிங்கள அரசாங்கத்தை நிர்ப்பந்திக்கின்றன.

எனினும், சர்வதேச நாடுகள் கண்டுணர்ந்த களயதார்த்தத்தை ஏற்றுக்கொண்டு - கொள்கை மாற்றத்தில் ஈடுபட சந்திரிகா அரசாங்கம் தயாராகஇல்லை.

போரைத் தீவிரப்படுத்தவும், நவீன ஆயுததளபாடங்களை மேலும் - மேலும் கொள்வனவு செய்வதிலும், சிங்களதேசத்தை போருக்காக தயார்ப்படுத்துவதிலுமே அது ஈடுபடுகின்றது.

சமாதானப் பேச்சுவார்த்தை என்ற விடயத்தை சர்வதேச சமூகத்தை ஏமாற்ற நடாத்தும் ஒரு தந்திரோபாய அரசியற் செயற்பாடாகவே சந்திரிகா அரசாங்கம் கருதுகின்றது.

இது சர்வதேச நாடுகளை குறிப்பாக ஐரோப்பியநாடுகளை ஏமாற்றத்திற்குள்ளாக்கியுள்ளது.

இவை ஒருபுறமிருக்க.

சந்திரிகா அம்மையாரின் போர் நிலைப்பாட்டிற்கு மாறாக புலிகளுடன் பேசி அரசியற் தீர்வொன்றைக் காண முயலவேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் ரணில்விக்கிரமசிங்க அரசியல் நிலைப்பாடெடுத்து கருத்துக்கூறி வருகின்றார்.

இது காரணமாக பல சர்வதேச நாடுகள் ரணில் விக்கிரமசிங்காவுடன் இராஜதந்திரரீதியில் தொடர்புகொண்டு - கருத்துப் பரிமாற்றம் செய்வதில் ஆர்வம் காட்டுவதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. அத்துடன், சந்திரிகா அரசாங்கத்திற்கெதிராக, மட்டுப்படுத்தப்பட்டளவில், இராஜதந்திர அழுத்தங்களை கொடுப்பதாகவும் பொருண்மிய உதவிகளைத் தாமதப்படுத்துவதாகவும் கூறப்படுகின்றது.

இத்தகைய புறநிலையில்,

சந்திரிகா அம்மையாரிடமிருந்து சிங்கள அரசின் தலைமைப்பதவி ரணில் விக்கிரமசிங்காவிடம் கைமாறுவதை சர்வதேசம் இப்போது விரும்புகின்றதா? என்ற கேள்வி கொழும்பில் எழுப்பப்படுகின்றது:

"அவ்விதம் விரும்புகின்றன" என பேரினவாதத்தின் சித்தாந்தவாதியாகவும், பிரகடனப்படுத்தப்படாத பேச்சாளராகவும்- ஐலண்ட் பத்திரிகை வாயிலாக- செயற்பட்டுவரும் பிரபல பத்தி எழுத்தாளர் நளின் - டி - சில்வா கருத்துக்கூறி கட்டுரை வரைந்துள்ளார்.

ரணில் விக்கிரமசிங்காவின் தலைமையில் புதிய அரசாங்கம் அமைந்தால் அது உடனடியாகப் போரை நிறுத்தி புலிகள் இயக்கத்துடன் பேச்சுவார்த்தைகளை நடாத்தி ஒரு அரசியல் இணக்கப்பாட்டிற்கு வரும் என்று மேலைத்தேய இராஜதந்திரிகள் நம்புவதாகவும்.;

அதனால் எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் பொ. ஐ. முன்னணி தோல்வியடைய வேண்டுமென்று அவை விரும்புவதாகவும்;

அரசாங்கத்தின்மீது சிங்கள மக்களின் அதிருப்தியை வளர்த்துவிடுவதற்காக அரசாங்கத்திற்கான உதவித்திட்டங்களை தாமதப்படுத்துவதாகவும்;

அரசசார்பற்ற நிறுவனங்கள் மூலம் சந்திரிகா அரசாங்கத்திற்கெதிராக மறைமுகப் பிரச்சாரங்களில் ஈடுபடுவதாகவும் சிங்களப் பேரினவாதிகள் மேற்கு நாடுகளை குற்றம்சாட்டுகின்றனர்.

சமாதான தேவதை என்றும் - அப்பழுக்கற்ற ஜனநாயகவாதி யென்றும் - துணிச்சல்மிக்க பல்லினத்தலைவர் என்றும் - முன்பு, மேற்கு நாடுகளால் புகழாரம் சூட்டப்பட்ட அம்மையாரை, இன்று சமாதானவிரோதி போல அது பார்க்க முனைவது ஒரு அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த செய்தியாகும்.



புலிகள் அழிக்கப்படும்வரை போர் தொடரும் என்ற அம்மையாரின் நிலைப்பாட்டை பேரினவாதிகள் ஆதரித்துள்ளனர். அம்மையாருக்கு தமது அரசியல் ஆதரவை வழங்கி தமது தலைவியாகவும் அவரை ஏற்றுக்கொண்டுள்ளனர்.

இதேவேளை, மேற்கு நாடுகளுக்கெதிராகவும் - அவற்றின் கிளைநிறுவனங்களான அரசசார்பற்ற நிறுவனங்களுக்கெதிராகவும் சிங்களப்பேரினவாதிகள் கோபம் தீவிரப்பட்டுள்ளதை கொழும்பில் வெளிப்படையாக காணக்கூடியதாகவுள்ளது.

**- எல்லாளன் -**

இவற்றின் அடிப்படையில் பார்க்கும்போது நளின்-டி-சில்வா தெரிவித்திருப்பதைப் போல ஆட்சி மாற்றமொன்றை மேற்குலகம் எதிர்பார்ப்பதை உணரக்கூடியதாய் உள்ளது.

ஆனால், அது விரும்பும் இந்த ஆட்சிமாற்றம் இலங்கையின் இனப்பூசலை முடிவுக்குக் கொண்டுவர உதவும் என அது நம்பவிரும்புவதில் தான் சர்ச்சையே உள்ளது.

17 வருடகாலம் ஆட்சிசெய்த ஐ.தே.கட்சி அரசாங்கத்தின் இனவெறிக் கொள்கையால் இலங்கைத்தீவு இரத்தக்களரியாக மாற்றப்பட்டபோது, அமைதிக்கோசத்தை உரத்து முழங்கிய சந்திரிகா அம்மையார் ஆட்சிப்பொறுப்பேற்றால் இரத்தக்களரி நிறுத்தப்படும் என நம்பிய சர்வதேச நாடுகள் அம்மையாரை ஆதரித்தன.

ஆனால், பதவியேற்றபின் ஐ. தே. கட்சியின் போர்க்கொள்கையை அம்மையார் தீவிரப்படுத்தியதையே உலகம் கண்டது.

இப்போது ஐ. தே. கட்சியே சமாதானத்தை பிறப்பிக்கப் போவதாக பேசும்போது சர்வதேசம் அக்கட்சிமீது நம்பிக்கை கொள்ளத் தொடங்கியுள்ளது.

தீவிர சிங்களப் பேரினவாதிகளாகவும் - தமிழினத்திற்கு எதிரான ஆட்சியாளர்களாகவும் வரலாறு அடையாளம் காட்டிய சிங்களதேசத்தின் தலைவர்கள் ஆட்சியில் இல்லாதபோது, தமிழரின் தேசிய இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வு பற்றியே பேசியிருந்தனர் என்பதும், பின்னர் ஆட்சிப்பொறுப்பு இவர்களின் கைகளிற்கு வந்தபோது எவ்வாறு தமிழ்மக்களுக்கு எதிராக வெறித்தனமான கொள்கைகளை நடைமுறைப்படுத்தி தீவையே இரத்தக்களரியாக மாற்றியிருந்தனர் என்பதும் வரலாறாகும்.

அதுபோலவே, தனிச்சிங்களச் சட்டத்தை பண்டாரநாயக்கா பாராளுமன்றில் சமர்ப்பித்த போது "இருமொழி ஒரு நாடு; ஒரு மொழி இருநாடு" என்ற பிரசித்திவாய்ந்த அரசியல் தீர்க்கதரிசனத்தை உதிர்த்த இடதுசாரியான கொல்வின் - ஆர் - டி சில்வா அவர்களே அரசியல் அமைப்புச் சட்ட வாயிலாக தமிழ் இனத்திற்கிருந்த பாதுகாப்பு சரத்துக்களை நீக்கி (1972இல்) ஆட்சியில் சிங்கள - பௌத்த ஆதிக்கத்தை உறுதிப்படுத்த காரணகர்த்தாவாக இருந்தார் என்பதும் வரலாறாகும்.

ஆட்சிப்பொறுப்பில் இல்லாது எதிர்க்கட்சியாக இருக்கும்போது உலகின் அரசியல் நீரோட்டத்திற்கு ஏற்ப - சிங்களத்தலைவர்கள் - அறிக்கைகள் விடுவதும், பின்னர், ஆட்சிக்கட்டிலேறியதும் பேரினவாதத்தின் காவலர்களாக தீவிரமாகச் செயற்படுவதும் இலங்கைத்தீவின் அரசியல் வரலாறாகும்.

இப்போது ரணில் விக்கிரமசிங்காவின் தலைமையிலான ஐ. தே. கட்சியின் முறை வந்துள்ளது.

புலிகளுடன் பேசி - போரை நிறுத்தி - சமாதானத்தைக் காணமுயலவேன் என்று கூறும் ரணில் விக்கிரமசிங்கா, இனப்பிரச்சனையை நிரந்தரமாகத் தீர்க்க எத்தகைய அரசியல் திட்டத்தை வைத்துள்ளார்?

வடக்கு - கிழக்கிற்கு அதிகாரங்களை பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுப்பேன் என்று பொத்தாம் பொதுவாகக்கூறும் அவர், தமிழரின் அரசியல் அபிலாசைகள் பற்றி சாதகமான நிலைப்பாட்டைக் கொண்டிருக்கவில்லை என்பது தெளிவு.

தாயகம் - தேசியம் - தன்னாட்சி என்ற தமிழ்மக்களின் அரசியல் அபிலாசைகளை ஏற்றுக்கொண்டு அதன் அடிப்படையில் அரசியல் தீர்வுகாணமுயல்வேன் என ரணில் விக்கிரமசிங்கா ஒருபோதும் கூறவில்லை. அத்துடன் ஆக்கிரமிக்கப்பட்ட தமிழர் நிலங்களைக் கைவிட்டு - பின்வாங்கி ஓடாது புலிகளுக்கெதிராக வீரமாகப் போர்புரியும்படி அவர் சிங்களப் படையினரை உற்சாகப்படுத்துகின்றார். பண்டைய சிங்கள மன்னர்களின் வரலாற்றை நினைவூட்டி சிங்களத் தேசிய வெறியை படையினருக்கு ஊட்டுவதிலும் ஈடுபடுகின்றார்.

இந்த நிலையில், ரணில் விக்கிரமசிங்காவின் தலைமையிலான ஐ. தே. கட்சியின் கைகளில் ஆட்சிப்பொறுப்பு சென்றடைவதற்கும் - போர் ஓய்ந்து நிரந்தர சமாதானம் ஏற்படுத்தப்படுவதற்கும் எதுவித தொடர்பும் இல்லை.

தமிழினத்திற்கெதிரான அரசியல் - நிர்வாக மையமாகவே ஸ்ரீலங்கா அரசும்- அதன் அரசியல் யாப்பும் உள்ளது. எண்ணிக்கையில் பெரும்பான்மையான சிங்கள - பௌத்தர்களின் ஆதிக்கத்தை நிலைநிறுத்தும் சர்வாதிகார நிறுவனமாகவே சிறிலங்கா பாராளுமன்றம் செயற்படுகின்றது. அரசின கல்விக்கொள்கையும் பொருண்மியத திட்டமிடலும் - நிர்வாகக் கட்டுமானங்களும் பேரினவாத சித்தாந்தத்திற்கு சேவைசெய்யும் வகையிலேயே நிர்மாணிக்கப்பட்டுள்ளன. கருத்துக்களைப் பரப்பும் சிங்களத்தொடர்பூடகங்களின் அரசியல் அடித்தளமாக பேரினவாத சித்தாந்தமே உள்ளது. இந்த உண்மைகளைக் கண்டறியும் ஒருவர் சிங்கள - தமிழ் இனப்பிரச்சனையின் சிக்கலான வடிவத்தை கண்டறியமுடியும்.

தமிழரின் அரசியல் அபிலாசைகளை ஏற்றலென்பது, சிங்கள-பௌத்த பேரினவாத சித்தாந்தத்திற்கு முற்றிலும் விரோதமானது. தமிழரின் தேசிய இனப்பிரச்சனைக்கு நிரந்தரத் தீர்வுகாண விரும்பும் ஒரு ஆட்சியாளர் சிறிலங்கா அரசின் கட்டமைப்பிலும் - அதன் அரசியல் யாப்பிலும் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தவேண்டும். இது நடைமுறைச்சாத்தியமானது என்பதற்கு எந்தவொரு அறிகுறியும் இல்லை.

இந்தப் பேருண்மைகளை அசட்டை செய்துவிட்டு, ஆட்சியாளர்கள் மாறினால் அரசியல் பிரளயங்கள் நடைபெறலாம் என்ற சர்வதேசத்தின் நம்பிக்கை இலவு காத்த கிளியின் கதையாகவே முடியும்.

O





www.eelamview.com



''கடலிலே காவியம் படைப்போம்''

**வ**லுப்பெற்றுவரும் கடற்புலிகளின் செயற்திறனால் ஸ்ரீலங்காவினுடைய போர்வலுவின் உயிர்நாடி உலுப்பி எடுக்கப்பட்டு வருகின்றது. முல்லைக் கடற்பரப்பிலும், பருத்தித்துறை கடற்பரப்பிலும் யூன் 05, 25 ஆகிய தினங்களில் நடந்த பாரிய கடற்சமர்கள் தமிழீழக்கடற்பரப்பில் கடற்புலிகள் பெற்றுவரும் உறுதியான மேலாண்மையின் சான்றாகின. தமிழீழப் போரின் அடுத்தகட்டத்தைத் தீர்மானிக்கும் சக்தியை கடல்சார் போர்வலுவே பெற்றுவிட்ட நிலையில் கடற்புலிகள் தமது போர்த்திறனை உறுதிப்படுத்தியுள்ளனர். குறிப்பாக, ஓயாத அலைகள் -03 படையணிகளால் முற்றுகைக்குள்ளாக்கப்பட்டு பலவீனப்படுத்தப்பட்டுள்ள குடாநாட்டு ஆக்கிரமிப்பின் உயிர்வழி விநியோக மார்க்கம்பற்றிய உறுதியின்மையை இக்கடற்சமர்கள் ஏற்படுத்தியுள்ளன.

சாத்தியமற்றுப்போகும். இத்தகையதொரு நிலையில்தான் முல்லை, பருத்தித்துறை கடற்பரப்புக்களில் பாரிய கடற்சமர்களை நடாத்திமுடித்துள்ளனர் கடற்புலிகள்.

யூன் 05 அதிகாலை, காங்கேசன்துறை கடற்படைத்தளத்திலிருந்து ஸ்ரீலங்கா கடற்படையின் வேக விநியோக தொடரணி ஒன்று திருமலை நோக்கிய தன் பயணத்தை தொடங்கியிருந்தது. 150 - 200 வரையான துருப்புக்களை ஏற்றக்கூடிய இரு துருப்புக்காவிகளும் அவற்றிற்கு பாதுகாப்பான இரு அதிவேக சுப்படோறா பீரங்கிப் படகுகளும் கடல் ரோந்துப் படகுகளின் பாதுகாப்பில் பயணித்தன. கடற்புலிகளின் கெரிலாப்பாணியிலான தாக்குதலுக்குரிய சாத்தியப்பாடுகள் அற்றதொரு சூழலையே தன் அதியுயர் பாதுகாப்பாக கொண்டிருந்தது

அதை முற்றாகச் செயலிழக்கச் செய்தது. களத்தில் எதிரி தனது முதலாவது கலத்தை இழந்தான். சேதமடைந்திருந்த ஆண்டானின் சண்டைப்படகும் சற்றுநேரத்தில் ஆழ்கடலிலேயே இயங்கமறுத்து நின்றது.

தனது தொடரணி கடுமையாகத் தாக்கப்பட்டுக்கொண்டிருப்பதை அறிந்த கடற்படைத்தலைமை நாகர்கோவில் கடற்பரப்பில் ரோந்தில் நின்ற மேலும் இரு டோறாக்களை உடனடியாக சண்டைக்களத்திற்கு அனுப்பிவைத்தது. மேலதிக பலத்தை எதிரி பெற்றுவிட்ட நிலையில் அவன்மீது ஒரு திசைதிருப்பும் தாக்குதலைச் செய்தவாறு மேலுமொரு படகுத் தொகுதியை புதியமுனையில் சண்டைக்கு இறக்க முடிவுசெய்தார் தளபதி கேணல் சூசை.

மணியரசனின் படகுத்தொகுதி எதிரி டோறாக்களை கவர்ந்தபடி தாக்குதலில் ஈடுபட்டவாறு கரையை நோக்கி பின் நகர்ந்தது. சமநேரத்தில் உயரக்கடலேறிய லெப். கேணல் செழியனின் படகுத்தொகுதி ஏற்கனவே செயலிழந்துநின்ற டோறாவை மீட்கமுனைந்த டோறாமீது தாக்குதலை நடாத்தியவாறு புதியமுனையால் களத்தில் பிரவேசித்தது. எதிரியின் போர்வியூகம் ஆட்டம்கண்டது. புதிய வியூகம் அமைப்பதற்காய் டோறாக்கள் சண்டையிட்டன. நவீன பீரங்கிகள் பொருத்தப்பட்ட நிலையில் களத்தில் செயலிழந்துநின்ற தனது டோறாவை பாதுகாப்பதில் எதிரி அதிக அக்கறை காட்டினான்.

கடுஞ்சமர் தொடர்ந்துகொண்டிருக்க சேதமுற்ற டோறாக்கள் களத்திலிருந்து வெளியேறின. செயலிழந்த டோறாவும், ஆண்டானின் சண்டைப்படகும் அப்படி அப்படியே களத்தில் நின்றன. எதிரிக்குத் துணையாய் மேலும் சில டோறாக்கள் திருமலை, காங்கேசன்துறை கடற்தளங்களிலிருந்து களத்திற்கு வந்துசேர்ந்தன. அவசரமாக வரவழைக்கப்பட்ட விமானப்படையின் MI -24 உலங்குவானூர்திகளும் களத்தில் தாக்குதலை ஆரம்பித்தன. அதிகரித்துவிட்ட எதிரியின் பலத்துடன் கடுமையாகச் சண்டையிட்ட கடற்புலிகளின் படகுத்தொகுதிக்கு மேலதிக பலம்சேர்க்க மேலுமொரு படகுத்தொகுதி லெப். கேணல் செழியனிடம் அனுப்பிவைக்கப்பட்டது.

# ஆட்டங்காணும் ஆக்கிரமிப்பு இராணுவத்திற்கு ஆழ்கடற் சமர் ஓர் அபசகுனம்

ஐந்து வருடங்களின் முன் யாழ் குடாநாடு சிங்களப படைகளால் ஆக்கிரமிக்கப்பட்டபோது, தனது தேசத்துடனான உறுதியான தொடர்புகளற்று நீண்ட தொலைவில் வைக்கப்பட்டிருந்த அதன் படைகளின் இருப்புப் பற்றிய ஐயம் சாதாரண சிங்கள மக்களிடையேயும்கூட எழுந்திருந்தது. முல்லைத்தீவு இராணுவத்தளத்தை வெற்றிகொண்டதன் மூலம் வலுவான கடற்பரப்பொன்றை புலிகள் தமக்கு சொந்தமாக்கியபோது பன்மடங்கு வலுவானது அவர்களின் இந்த ஐயம். தரைவழிப்பாதைக்கான உடனடி நெருக்கடியை சிங்களத் தலைமைக்கு ஏற்படுத்தியதும் இதுவே. அதுவும் புலிகளால் உறுதியாக முறியடிக்கப்பட்டபோது கடலை தம் பூரண கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பதொன்றே அவர்களின் இறுதியான நிர்ப்பந்தமாகியது. இப்படி, குடாநாட்டு ஆக்கிரமிப்பின் இருப்பு சிங்களத்தின் கடற்போர் வலுவில் தங்கிக்கொள்ள, அதன் மீட்புப் புலிகளின் கடற்போர் வலுவிலேயே தங்கிக்கொண்டது.

இந்நிலையில், குடாநாட்டு மீட்பின் ஓயாத அலைகள் -03 நடவடிக்கையில் காத்திரமான பணிகளை கடற்புலிகள் கரம்சேர்த்தார் தலைவர் பிரபாகரன். தரையிறக்கல் நடவடிக்கைகளில் தமது உயர்நகர்திறனையும், செயற்திறனையும் நிரூபித்தனர் கடற்புலிகள். ஈற்றில் ஆனையிறவுத் தளத்தின் வீழ்ச்சி அச்சுறுத்தலற்ற நீண்ட கடற்கரையோரத்தை கடற்புலிகளுக்கு சொந்தமாக்கியபோது மேலும் பலம் கொண்டது கடற்புலிகளின் போராற்றல். இவை குடாநாட்டில் சிங்களப் படைகளின் இருப்பை வலுவான கேள்விக்குள்ளாக்கின.

தற்போதைய நிலையில் மாற்றுவழி ஏதுமின்றி, கடற்தொடர்பே யாழ் ஆக்கிரமிப்பின் உயிர்நாடி. தமிழன் கடலே சிங்களத்தின் உயிர்வழி. ஆனால், அதுவே தலைவர் பிரபாகரனின் போர்த்திட்டமிடலின் அடிப்படையும் ஆக்கப்பட்டாயிற்று. கடலில் புலிகள் ஆதிக்கம் மேலோங்கும் நிலையில் யாழில் சிங்களத்தின் இருப்பும் ஈற்றில் அததுருப்புக்களின் மீட்புமே

அத்தொடரணி. தெளிவான பகற்பொழுதிலேயே தன் பயணத்தை முடித்துவிடக்கூடியதாயும், கடற்புலிகளின் கட்டுப்பாட்டு நிலப்பரப்பிலிருந்து தூரவிலகி ஆழ்கடலில் பயணிக்கக்கூடியதாயும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது அதன் பயணம். வழமைபோலவே அது தாக்கப்படும் பட்சத்தில் கடல், வான் படையின் மேலதிக உதவிகளை அனுப்பக்கூடிய நிலையில் கடற்படை உயர் கட்டளைப்பீடம் இருந்தது.

யூன் 05 காலை 6 . 45 மணி. சுண்டிக்குளம் கரையிலிருந்து சரியாக 24 கடல் மைல் உயரம். லெப். கேணல் மணியரசனின் தலைமையிலான முதலாவது படகுத் தொகுதிக்கு எதிரியின் விநியோகத் தொடரணியை மறித்து வியூகமிடுவதற்கான கட்டளையை வழங்கினார் கடற்தளபதி கேணல் சூசை. படகுகள் உயரக் கடலேறின. பேரபாயம் சூழ்வதை உணர்ந்துகொண்ட டோறாக்களுடன் கடுமையாக மோதியவாறு

**- அ. பார்த்தீபன் -**

தமது வியூகத்துள் அவற்றை சிக்கவைத்தன கடற்புலிகளின் படகுகள். அதிநவீன பீரங்கிகள் பொருத்தப்பட்ட இரு படையின் படகுகளுக்குமிடையே கடும் கடற்சமர் வெடித்தது.

எதிரியின் டோறாக்களை துணிச்சலாக நெருங்கினர் கடற்புலிகள். கடற்புலிகளின் துணிச்சலான முன்னகர்விற்கும், துருப்புக்காவிகளுக்கான தனது பாதுகாப்பு பணிக்குமிடையே எதிரி டோறாக்கள் திணறின. ஒருகட்டத்தில் லெப். கேணல் ஆண்டானின் கட்டளையிலான சண்டைப்படகு சடுதியான பீரங்கிக்குண்டுப் பரிமாற்றத்தின்பின் தான் எதிர்த்துநின்ற டோறாவை நெருங்கி

புதிய பலம்பெற்ற இருபகுதியின் தாக்குதிறனும் மூர்க்கம் பெற்றது. சண்டையின் ஒருகட்டத்தில் செயலிழந்துநின்ற டோறாவிற்கும், அதை மீட்க முயற்சித்த டோறாவிற்கும் இடையில் துணிகரமாக புகுந்து அவற்றின் தொடர்பை அறுத்தவாறு தாக்கத்தொடங்கியது கடற்புலிகளின் சண்டைப்படகொன்று. ஏனைய படகுகளும் நெருங்கிவர மீண்டும் உடைந்தது எதிரியின் போர்வியூகம். செயலிழந்த டோறாவை கைவிட்டு எதிரி டோறாக்கள் ஓட்டம்பிடித்தன. களத்தில் மேலாண்மை பெற்றனர் கடற்புலிகள். கடற்படைக்கலங்களை கடற்புலிகள் கலைத்துத் தாக்கத்தொடங்கினர்.

எதிரி டோறாக்களை எதிர்கொண்டு அவற்றுடன் சண்டையிட்டவாறு பின்தொடர்ந்த கடற்புலிகள் படகுகளை பக்கவாட்டாக இருமுனைகளாலும் MI - 24 உலங்குவானூர்திகள் மூர்க்கமாகத் தாக்கின. அசாத்திய துணிவு மட்டுமே கடற்புலிகளின் கவசமாகியது. எதிரி டோறாக்களை நெருங்கித் தாக்கியபடியே இருந்தனர் கடற்புலிகள். எதிரியின் மற்றைய டோறா ஒன்றும் களத்தில் செயலிழந்தது. இன்னொன்று சேதத்துடன் களத்திலிருந்து பின்வாங்கிக்கொண்டிருந்தது.

நேரம் 10. 00 மணி. எதிரியின் கிபிர் யுத்த விமானங்கள் களத்தின் வான்பரப்பில் பிரவேசித்தன. எதிரிப்படகுகளுடன் நெருங்கிய தாக்குதலில் ஈடுபட்ட கடற்புலிகள் படகுகளை தாக்கமுடியாதவாறு திணறிய அவை நீண்டநேரமாக சிரமப்பட்டன. தாக்குதல் நடாத்த தாழ்ந்தபோது கடற்புலிகளின் பீரங்கித் தாக்குதலால் மேலும் அது திணறியது. முதல்முறை தாக்கிய கிபிர் விமானங்கள் இரண்டாம்முறையும் தாக்குதல் நடாத்தியபோது தாக்குதலுக்குள்ளானது எமது படகல்ல, எதிரி டோறா ஒன்றே. செயலிழந்த டோறா புகைக்கத்தொடங்கியது.

ஆழ்கடலில் சண்டைதொடர்ந்தது. நிலைமையை எதிரியால் கட்டுப்படுத்த முடியவில்லை. பாதகமான களநிலையிலிருந்து


www.eelamview.com

தப்பியோடுதலே எதிரிக்கிருந்த ஒரே தெரிவானது. பேரழிவுகளைத் தவிர்க்கவே எதிரி விரும்பினான். நான்கு மணிநேரத்தையும் கடந்த நீண்ட கடற்சமரின் முடிவு எதிரியை பின்வாங்க நிர்ப்பந்தித்தது. மூழ்கும் நிலையிலிருந்த டோறா ஒன்றைக் கைப்பற்றிய கடற்புலிகள் அதிலிருந்த நவீன ஆயுதங்களை கைப்பற்றியபின் அதை மூழ்கடித்தனர். மூழ்கியபடியிருந்த மற்றைய டோறாவை எதிரி மீட்க முயன்றபோது அதுவும் மூழ்கிக்கொண்டது. ஈற்றில் மீளப்பயன்படுத்த முடியாதபடி சேதமுற்ற இரு டோறாக்கள் கட்டியிழுக்கப்பட்ட நிலையிலும், சாதாரண சேதங்களைத் தாங்கிய மற்றைய டோறாவுமாக எதிரிபபடகுகள் தம் தளம்திரும்பின. ஸ்ரீலங்கா கடற்படை பேரிழப்பைச் சந்தித்தது இவ்வெற்றிச் சமரில் கடற்புலிகள் படகொன்றின் கட்டளை அதிகாரி லெப். கேணல் ஆண்டான் உட்பட பதின்மூன்று கடற்புலிகள் வீரச்சாவடைந்தனர்.

தமிழீழ கடலன்னையின் மடியில் நடந்த அன்றைய பெரும்சமர் ஓய்ந்தது. கரைதிரும்பிய கடற்புலிகள் ஆழ்கடலில் தமது வீரத்தின முத்திரை பதித்திருந்தனர். தோல்வியுடன் தன் தளம்திரும்பிய சிங்களத்தின் கடற்படையோ தன் செயற்திறனில் ஆழவடுக்களை சுமந்தபடியே போயிருநதது. எனினும், ஆழ்கடலே அதற்கிருககும் இறுதிவழி.

அதிகரிக்கப்பட்ட பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் மீண்டும் ஆழ்கடலூடு கடற்படைத் தொடரணிகள் போய்வரத் தொடங்கின. அதிலும் இலக்குவைத்து களம்தேடினர் கடற்புலிகள்.

யூன் 25, குடாநாட்டு இராணுவத்தினருக்கு தேவையான நவீன ஆயுதங்களையும், பெருமளவு வெடிப்பொருட்களையும் சுமந்தபடி மிதக்கும் பாரிய இராணுவக்களஞ்சியம்போல் 'உகண' என்ற பாரிய கப்பல் தன் பயணத்தை தொடங்கியிருந்தது. வெறுமேன ஆயுதங்கள் என்பதற்கும் அப்பால் நவீன ஆயுதங்களையும் வைத்து தன் படைகளுக்கான உளவுறுதியைக் கட்டிவளர்க்கும் சிங்களத் தலைமையின் இறுதி நப்பாசையின் ஒரு பகுதியையும் அன்று 'உகண' தன்னுள் சுமந்திருந்தது. அதன் முக்கியத்துவத்திற்கேற்பவே அதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகளும் இருந்தன. இரு பீரங்கிக் கப்பல்களுடன், ஆறு அதிவேக டோறா பீரங்கிப்படகுகளும் 'உகண' வின் பாதுகாப்பை உறுதிப்படுத்தியபடி ஆழ்கடலில் அதை அழைத்துச் சென்றன.

தமிழீழ கடல் முழுமையுமே கடற்புலிகளின் வீரத்தின் கையிருப்புகளல்லவா. அதில் ஆழ்கடல் என்றும், சிங்களத்தின் ஆதிக்கப்பரப்பு என்றும் வேற்றுமைகள்தான் உண்டோ? இதில் எதைத்தானும் தன் பாதுகாப்பின் உத்தரவாதங்கள் என சிங்களம் ஆறுதல்கொள்ளமுடியுமா? இதுபற்றி சிங்களத்திற்கு பாடம் புகட்டுதலே கடற்புலிகளின் இன்றைய இலக்கு. அதுவே. இந்த அதிபாதுகாப்பு தொடரணியை எவ்விடத்தில் எதிர்கொள்வது என்ற தீர்மானத்தை கடற்புலிகளுக்கு எடுக்கத்தூண்டியது.


பருத்தித்துறைக் கடற்பரப்பு. கரையிலிருந்து சரியாக ஐம்பத்தைந்து கடல்மைல் உயரம். நேரம் நள்ளிரவு 11. 30 மணி. கடற்புலிகள் தளமிருந்து புறப்பட்ட படகுத்தொகுதிகள் கடற்படையின் கடல்ரோந்துப் படகுகளின் கண்காணிப்பையும் தாண்டி விநியோக தொடரணியை வழிமறித்தன. ஆக்கிரமிப்புக் கோட்டையின் கடற்பரப்பில் அன்றைய சமர் மூண்டது. கோட்டையின் வாசலில் வைத்தே இம்முறை தம் பலத்தை கடற்புலிகள் நிரூபிப்பர்.

கடலில் எதிரிக்கு சிம்மசொப்பனமான கடற்கரும்புலிகளின் உயிராயுதங்களே அன்றைய சமரின் வெற்றியை தீர்மானிக்கும் சக்திகள். கடற்கரும்புலிகளின் இரு வெடிமருந்துப்


( 10 ஆம் பக்கம் பார்க்க )



கடற்கரும்புலி
லெப். கேணல் ஞானக்குமார்



கடற்கரும்புலி
மேஜர் சூரன்



கடற்கரும்புலி
மேஜர் நல்லப்பன்



## கருணைக் குருதி


சுட்டதங்கமாய் எண்ணமெல்லாம்
சோதிபெறும் போதிநெருப்பில்
பொங்கிக் கொதித்ததுங்கள் பாலுள்ளம்
கண்சிமிட்டித் துலங்கும் காலவழி
பற்றுரிந்து நடந்தீர்கள்
சூழவும் சுடர்பெருக.

சகஉயிரின்
சிறுவலியும் தாளாது
பொசுக்கென்று நீர்துளிர்க்கும்
மிருதுமனங்களின்
முள்ளணிந்த இதயம்
முத்து முத்தாய் துளிர்க்கும்
ஒவ்வொரு துளிகுருதியிலும்
பூப்பூவாய்
கருணை பூக்கலாயிற்று.
( கொய்து, மனஞ்சூடினோம் )
பூக்களின் பரிவில்
பொன்துகளின் புன்னகை
மின்னலாயிற்று முகங்களில்.


கருணைக் குருதி
மொத்தமும் தெறிக்க
திசுக்கள் மரிக்கின்றன.
திசுக்களே மரிக்கின்றன.
உலவும் மனிதரில்
உயிரின் சலனம்
மனஞ்சூடிய பூக்களே!

எஸ். உமாஜிப்ரான்






கடற்கரும்புலி
மேஜர் சந்தனா



கடற்கரும்புலி
கப்டன் யாமினி




கடற்கரும்புலி
கப்டன் இளமதி



www.eelamview.com

# இறங்கப்போகும் சிங்கக்கொடிக்கு இசைக்கப்பட்ட முகாரி— — —



அன்று யூன் 09ம் திகதி மாலை நேரம்; வரிப்புலிகள் சீருடையோடு ஒரு பெரும் படையெனத் திரண்டிருந்தனர். இது போருக்குப் புறப்படு முன்னான ஒன்றுகூடல். போருக்கான திட்டம் தலைவரால தளபதிகளுக்கு விளங்கப்படுத்தப்பட்டு தளபதிகள் அணித்தலைவர்களுக்கு செல்லும்வழி வெல்லும்வழி போதித்து முடித்து இப்போது புறப்படும் முன் போராளிகளுக்கான இறுதி விளக்கவுரை நடந்துகொண்டிருந்தது.

ஏற்கனவே யாழ்ப்பாணத்தில் ஒரு படைவிலகலுக்காக விடுதலைப் புலிகள், அரசுக்கு பகிரங்கமான அறிவித்தல் விடுத்திருந்தனர். அரசு அதற்கு உடன்படாத பட்சத்தில யாழ்ப்பாணத்தில் படைகளை நாமே விலக்க வேண்டிவரும் என்றும் அறிவுறுத்தியிருந்தனர் ஆனால் அரசோ, ''பலவீனப்படுப்போயுள்ள புலிகள் நடாத்தும உளவியல் போரே இந்த அறிவுறுத்தல் எனவும், சில காலநிலைக் கோளாறுகளால் இழக்கப்பட்ட பிரதேசங்களைக்கூட பிடித்தே தீருவோம். யுத்தத்தை முடித்தே தீருவோம்'' என்று தன் ஆக்கிரமிப்பு திமிர்த்தனத்தை கக்கியது. அவர்களைப் பொறுத்தவரையில் யாழ் குடாநாட்டின் புவியியல அமைவும், அதன் பாதுகாப்பு ஏற்பாடுகளும், அங்கு நிலைகொள்ள வைக்கப்பட்டிருந்த படைவலுவும் புலிகளால் என்றும் வெல்லப்பட முடியாத சக்திகளாகவே தெரிந்தன. ஆனால், செய்ய முடியாததைச் சொல்வதோ, சொல்வதைச் செய்யாமல் விடுவதோ புலிகளின் மரபல்லவே. பிரபாகரன் தலைமையேற்ற தமிழர்படை நிலம்மீட்கத் தயாரனது.

இதுதான் போராளிகள் உறுதிப்பிரமாணம் எடுத்து, பிரியாத விடைகொடுத்து பிரிந்துசெல்கின்ற நேரம். இனி அவர்களின் சந்திப்பு எங்கும் நடக்கலாம. களத்தில், தளத்தில், அல்லது மருத்துவவிடுதியில், அதுவுமல்லாவிடில் துயிலுமில்லத்தில். ஆனால், வெற்றியின் பின்பே இதில் எதுவும் நடக்கும். காற்று அதிர உறுதியெடுத்தனர் புலிகள். ''எமது இயக்கத்தின் மேன்மைமிகு குறிக்கோளாம் என உறுதி கூறி போருக்குப் புறப்படுவோம்.'' கையசைப்புகள், கட்டியணைப்புக்களோடு போராளிகள் தத்தமது பகுதிக்கட்டளைத் தளபதிகளோடு பிரித்துசெல்லத் தொடங்கினர்.

கிழக்கரியாலையிலிருந்து ஒரு இரகசிய நகர்வின் மூலம் எதிரியின முதலாவது முன்னணிக் காவலரண் தொடரை எம் அணிகள் கடக்கவேண்டும். அங்கிருந்து நகர்ந்து, நாவற்குழியையண்டி கண்டி வீதிக்குச் சமாந்தரமாகவிருக்கும் தொடர் காவலரண்களில் சண்டையைத் தொடக்கி, நாவற்குழியில் கண்டிவீதியை ஊடறுப்பது அவ்வணிகளுக்கு இடப்பட்டபணி. அதேநேரம் தனங்கிளப்பிலிருந்து எதிரியின் முன்னணிக் காவலரணை இரகசிய நகர்வின் மூலம் கடந்து சாவகச்சேரி - தனங்கிளப்பு வீதியை ஊடறுப்பதும் தனங்கிளப்பு - மறவன்புலவு வீதியை ஊடறுப்பதுமே மற்றைய இரு அணிகளுக்கு வழங்கப்பட்ட பணி. தளபதி கேணல் சொர்ணத்தின் கீழ் இயங்கும் இச்சமர்முனையின தாக்குதலுக்கான முதல் நகர்வுகள் இவைதான்.. கிழக்கரியாலையும், தனங்கிளப்புமே இந்த நகர்வுகளுக்கான புலிகளின் புறப்படு தளங்களாக இருந்தன.

ஓயாத அலைகள் - 03 கட்டம் - 03 இன் போது புலிகளால் மீட்கப்பட்ட தனங்கிளப்பு, கிழக்கரியாலை ஆகிய பிரதேசங்களை புலிகள் இன்றுவரை தக்கவைத்துக் கொண்டது ஒரு சாதனையே. நீரேரி கடந்து, தரைவழி விநியோகமற்று மிகச் சிறிதளவான நிலப்பரப்பினுள் நிலைகொள்ளும் முயற்சி புலிகளின் ஒரு அசாத்திய துணிச்சலே. ஆனால் புலிகள் இதைச் சாதித்தனர். எதிரியின் எந்த முறியடிப்பையும எதிர்கொள்ளத் தயாராகவே புலிகள் காத்திருந்தனர். ஆயினும், எதிரி எமது இந்த நிலைகொள்ளலை முறியடிக்கமுடியாத கையாலாகாத்தனத்துடனேயே இருந்தான், பின்விளைவைப் புரிந்துகொள்ளத் தெரியாத எதிரி இப்போது விளைவுக்கு முகங்கொடுக்க வேண்டியதாயிருந்தது. குடாநாட்டில் ஒரு புறப்படுதளத்தைப் பேணியதே எமது இந்த நகர்வுக்கான அடிப்படைப் பலத்தைத் தந்தது.

09ம் திகதி இருளில் நாவற்குழி வீதியை ஊடறுப்பதற்காக அணிகள் நகர்ந்துகொண்டிருந்தன. போராளிகளின் நெஞ்சில் ஆவலும், படபடப்பும் கலந்து நிறைந்திருந்தது. யாழ்மண்ணை விட்டகன்றபோதான நினைவுகள் மனதில் மீண்டும் மீண்டும் எழுந்தன. 95ம் ஆண்டு எங்கள் தாய்மண் யாழ்மண்ணை சிங்களத்துப் படைகள் ஆக்கிரமித்தபோது சிங்கள தேசத்தில் அதை எப்படியெல்லாம் கொண்டாடினார்கள்! வவுனியா தடைமுகாமில் எங்கள் தமிழர்களுக்கே இனிப்புக்கொடுத்து தமிழரின் தன்மானத்தில் அறைந்தார்கள். யாழ்ப்பாணத்தில் அந்த சிங்கள இராணுவம் எங்கள் தோழர்களின் புதைகுழிகளைக் கிளறி வெற்றிவெறியாடியது. நெஞ்சு விம்மித்தணிய இந்த தேசத்தின் வீரர்கள் நகர்ந்துகொண்டிருந்தார்கள். வீழ்த்துவதைத தவிர வேறெந்த இலக்கும் அவர்களிடமில்லை.

சமரின் ஒருங்கிணைப்புக் கட்டளைத்தளபதி கேணல் பானுவின் கட்டளை மையத்தினுள் அமைதி குடிகொண்டிருந்தது. முதலாவது இரகசிய நகர்வு வெற்றிகரமாக நிகழ்ந்த செய்தி கிட்டினால்தான் தாக்குதலுக்கான உத்தரவைப்பிறப்பிக்க முடியும். வேறெந்தச் செய்தியும் விரும்பத்தக்கதல்ல. மனதில படபடப்பும், வெளியில் நிசப்தமுமாய் அந்தச் சூழல் இருந்தது.

- பிரபுத்திரன் -

கிழக்கரியாலையிலிருந்த எதிரியின் முன்னரங்க காவலரண்களில் விழித்திருக்கும் எதிரியின் பார்வைகளைக் கடந்து. ஒரு அணி இரகசிய நகர்வின் மூலம் தொடரரணைக் கடந்துவிட்டது. மற்றைய அணி கடந்துகொண்டிருந்தது. மூன்றாவது அணி கடப்பதற்குக் காத்துக்கொண்டிருந்தது. திடீரென எதிரித் துப்பாக்கிகள் முழங்கத்தொடங்கின. அப்போது நேரம் 1.30. குறித்த நேரத்திலிருந்து ஒருமணி நேரம் முன்பாகவே சண்டை தொடங்கிய சத்தம் கேட்டு எமது கட்டளை நிலையங்கள் பரபரப்படைந்தன. அணித்தலைவர்களிடமிருந்து தொலைத்தொடர்புக்கருவிகளில் வந்தசெய்தி நிகழ்ந்த துரதிஸ்டத்தை துப்பியது.

உடனடியாகத் தாக்குதலைத் தொடங்க கட்டளையிட்டார் சமரின ஒருங்கிணைப்புத் தளபதி கேணல் பானு. இரகசிய நகர்வு மூலம் கடக்கவேண்டிய காவலரண்தொடர், ஒரு சண்டையின் மூலம் கடக்கவேண்டியதாயிற்று. அதனால் முதலாவது தடையரணைக் கடப்பதற்கு போரிடவேண்டியிருப்பது ஒருபுறமிருக்க, எதிரி, இரண்டாவது காவலரண் தொடரில் தயாராகிவிடுவான் என்பதும, அதனைக் கடப்பது இலகுவாக இருக்கப்போவதில்லை என்பதும் புதிய சிக்கலாகியது. அதைவிடச் சிக்கலானது தனங்கிளப்பு, மறவன்புலவு வீதிகளை ஊடறுக்கவேண்டிய அணி இன்னும் இறுதி நகர்விடத்திலேயே இருந்தது தான். இவ்வணிகள் இனிமேல்த்தான் நகர்ந்து. உசாரடைந்துவிட்ட எதிரியோடு சாதகமற்ற நிலையில் சண்டையிடவேண்டிய துர்ப்பாக்கிய நிலையிருந்தது. எமது துரதிஸ்டம் எம்மை இப்படியொரு நெருக்கடிக்குள் தள்ளியது.

கிழக்கரியாலையிலிருந்து முன்னேறிய மாலதி, சாள்ஸ் அன்ரனி, இம்ரான் - பாண்டியன் படையணிகளைக் கொண்ட படைத்தொகுதியில் மாலதி படையணியின் அணியொன்று எதிரியின் அரண்களை வலம் இடமாகத் தாக்கி முன்னேற, இடையில் உருவாகிய பாதையூடாக மற்றைய அணிகள் உட்புகுந்து முன்னேறின. முன்னேறிய அணிகளில் சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணி நாவற்குழிப்பகுதியிலிருந்த இரண்டாவது தொடரரணை விரைந்து தாக்கியது. எதிரியின் நிலைகளுக்குள் புகுந்து. தொடரணைப் பிளந்து அவ்வணி வழிசமைக்க வீதியில் ஏறிக்கொண்டன ஏனைய அணிகள். நாவற்குழிப் பாலத்திற்கும். செம்மணிக்குமிடையிலான அவ்வீதியை ஊடறுத்து, வீதியின் இருபக்கமும் எதிரியின் தாக்குதலை முறியடிக்கக்கூடியவாறு நிலைகொண்டது மேஜர் ஜமுனா தலைமையிலான மாலதி படையணி, சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணி கண்டிவீதியால் அரியாலை நோக்கி முன்னேறிக்கொண்டிருந்தது, அதன் சிறப்புத் தளபதி லெப். கேணல் ராஜனின் தலைமையில்:

கண்டி வீதியில் ''யாழ்ப்பாணம் வரவேற்கிறது'' வளைவுக் கோபுரம் தரிசனம் தந்து வரவேற்கிறது இந்த மண்ணின் புதல்வர்களை. ஆனால், வலம் இடமாக பரந்து கிடந்த அந்த செம்மணி வெளிப்பரப்பு ஏதோ இனம்புரியாத உணர்வுகளை மனதில் கிளறியது.



www.eelamview.com

எதிரியைத்தேடி முன்னேறும் பரபரப்பிற்குள்ளும் அந்த வெளிப்பரப்பை கண்கள் குடைந்து எதையோ அறிந்துவிடத்துடித்தன. அந்தத் துடிப்பு எம் இனத்தின் ஆழப்பதிந்த வடுக்களிலிருந்து எழுவது.

ஆக்கிரமிப்பில் நாம்பட்ட அவலங்களின் சாட்சியமாய் அந்தப்பூமி வரலாறு முழுவதும் சிங்களதேசம் எமக்கிழைத்தவைபற்றிச் சொல்லிக்கொண்டேயிருக்கும். சிங்களதேசம் தன் வக்கிரத்தை, கொலைவெறியுணர்வை மூடி ஒரு ராஜபக்ஷாவுக்குள் அடக்கிவிட முயன்றபோது அவன் வாய்திறந்திருந்தான். ''நித்தமும் உடல்கள், புதைப்பதற்காக அதிகாரிகளால் அனுப்பிவைக்கப்படும். சிலவேளைகளில் உயிருடனும் அனுப்பிவைக்கப்படும் ; கொன்றுவிட்டுத் தாக்கவும் என்ற உத்தரவுடன் பெண்களை வல்லுறவு கொண்டுவிட்டு அலங்கோல நிலையில் அனுப்பிவைப்பார்கள் —— தொலைக்காட்சி பார்த்துக்கொண்டிருந்த இளங்குடும்பத்தில் பிள்ளைகளை விட்டுவிட்டு தாயையும், தந்தையையும் கூட்டிவந்து கணவனைக் கட்டிவைத்துவிட்டு மனைவியுடனுன் மாறிமாறி வல்லுறவு கொண்டோம், பின் தலையில் அடித்துக்கொன்றோம். பின் பார்த்துக் கொண்டிருந்த கணவனையும் கொன்றுபுதைத்தோம். கிருஷாந்தியை நாங்களெல்லோரும் வல்லுறவுகொண்டோம். இறந்தபின் அவளை அங்கே புதைத்தோம். கேட்கவந்த பெற்றோரையும், உற்றாரையும் சாட்சியமற்று அடித்துக்கொன்று புதைத்தோம் ....'' இப்படி அவன் சொன்ன பட்டியல் நீளமானது. அவன்போன்ற சிப்பாய்கள் தூக்குத்தண்டனை பெறநேர்ந்தால் அவர்கள் சொல்லப்போகும் செய்தி இன்னும் புதைந்துபோயுள்ள செம்மணிகளையே எமக்குத்தரும். ''யாழ்ப்பாணம் வரவேற்கிறது'' வளைவுகடந்து எம் கால்கள் நடந்தபோது சிங்களதேசம் எம் தேசத்துக்களித்த அவலங்களையும், அதன் நினைவுகளையும் சுமந்தே செல்லவேண்டியிருந்தது.

தனங்கிளப்பு - சாவகச்சேரி வீதியை ஊடறுக்கவேண்டிய அணி பரந்த வெட்டை கடந்து எதிரியின் முன்னணிக் காவலரண்களை தாக்கியழிக்கவேண்டியிருந்தது. எதிர்பாராமல் சண்டை தொடங்கிவிட்ட நிலையில் உசாரடைந்து தாக்கும் எதிரியை அண்மித்து தாக்குவது அவ்வணியால் இயலாமற்போனது. சாவகச்சேரி - மறவன்புலவு வீதியை ஊடறுக்கவேண்டிய தலைநகர் படையணி உசாரடைந்துவிட்ட எதிரியோடு ஒரு உக்கிர சண்டையைத் தொடக்கி வீதியை ஊடறுத்துக்கொண்டது. அதேநேரம் கோகிலாக்கண்டி முன்னரங்க காவலரண்களை உடைத்து முன்னேறவேண்டிய அணியும் உள்நுழைவது சாத்தியமற்றுப்போனது. மேற்கொண்டு இங்கு தாக்குதலிலீடுபடக்கூடிய வாய்ப்புகளற்ற சூழலில் இப்பகுதிச்சண்டை இடைநிறுத்தப்பட்டது.

அரியாலை பிரதான இராணுவ தளத்தை சென்றடைந்த சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணி அங்கிருந்து இராணுவத்தை முன்னேறவிடாது தடுத்துநிறுத்துவதுடன், ஒரு தாக்குதலையும் அத்தளம் மீது தொடுத்திருந்தது. மறுபுறத்தில் சாள்ஸ் அன்ரனி, இம்ரான் - பாண்டியன், மாலதி படையணிகளின் அணிகளைக் கொண்ட ஒரு படைத்தொகுதி கிழக்கரியாலையிலிருந்து செல்லும் எதிரியின் முன்னரங்க காவலரண்களுடாக மணியந்தோட்டம் நோக்கி முன்னேறியது. மணியந்தோட்டப்பகுதியில் எதிரிக்கும் எமக்குமான சண்டை வலுப்பெற்றது. அங்கு நடந்த ஒரு நீண்ட சண்டையின்பின் மணியந்தோட்டத்தில் எதிரி தோற்கடிக்கப்பட்டான். அங்கிருந்து கொழும்புத்துறை இறங்குதுறை நோக்கி இப்படைத்தொகுதி முன்னேறிக்கொண்டிருந்தது.

இத்தகைய நகர்வின் மூலம் அரியாலை பிரதான தளத்தை நாம் பக்கவாட்டாக சுற்றிவளைத்துக்கொண்டிருந்தோம். அதே நேரம் அரியாலை பிரதானதள இராணுவத்தை நாவற்குழி நோக்கி முன்னேறவிடாததுடன் அதன் கவனத்தையீர்த்தும தளம்மீது தொடர்ந்து தாக்குதலிலீடுபட்டது சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணி. அன்று மாலை 3.00மணியளவில் கொழும்புத்துறை இறங்குதுறையைச் சென்றடைந்த படைத்தொகுதி கடுமையான சண்டையிலீடுபட, அரியாலை பிரதானகளத்தில், எதிரி தான் பக்கவாட்டாக சுற்றி வளைக்கப்படுவதையுணர்ந்து நிலைதடுமாறினான். கொழும்புத்துறை இறங்குதுறையை கைப்பற்றுவதற்காக எதிரியும், நாங்களும் கடுமையாக மோதிக்கொண்டோம். இறுதியில் தளம் எம் கையில் வீழ்ந்தது.

இப்பொழுது கிட்டு பீரங்கிப் படையணியின் வலுவான சூட்டாதரவுடன் அரியாலைப் பிரதான தளத்தை தாக்கியழிப்பதற்கான சண்டையைத் தொடக்கிய புலிகள், தளத்தின் உட்புகுந்தனர். எதிரி தளத்தைக் கைவிட்டு பின்வாங்கி ஓடத்தொடங்கினான். அதே நேரம் கொழும்புத்துறை இறங்குதுறைமுகமும அதன் சூழவுள்ள பிரதேசமும் எமமால் வெற்றிகொள்ளப்பட்டது. அன்றைய இருள் பொழுதுக்கிடையில் கொழும்புத்துறையிலிருந்து துண்டிச்சந்திவரையும், அரியாலையிலிருந்து துண்டிச்சந்திவரையும் முன்னேறிய படையணிகள் தமக்குள் இணைப்பையேற்படுத்தி ஒரு பலமான தடுப்பு நிலைகளை அமைத்துக்கொண்டன. தளபதி லெப். கேணல் லக்ஷ்மனின் தலைமையிலியங்கிக் கொண்டிருந்த இப்பகுதி நடவடிக்கைகள் அன்றுடன் இலக்கைப் பூர்த்திசெய்து கொண்டது. ஆனால் இச்சண்டையில் நாம் ஒரு சிறந்த போர்வீரனை, இளந்தளபதியை இழக்கநேர்ந்தது.

லெப். கேணல் வசந் யாழ்ப்பாணம் மீதான எமது நகர்வுத் திட்டமிடலுக்கு ஆதாரமாக அமைந்தவன். ஒரு இளந்தளபதியான இவன், நேரடியாக வேவுப்பணியில் ஈடுபட்ட, எளிமையும், ஆற்றலும் கொண்ட ஒரு போர்வீரன் அவனது வேவுத் தரவுகளும், அவனது தனிப்பட்ட நமபிக்கை மிகான ஆலோசனைகளும் இந்த சமருக்கான திட்டமிடலில் முக்கியகவனத்தில் எடுக்கப்பட்டது. நடவடிக்கையின் போது ஒவ்வொரு அணிகளையும் வெற்றிகரமாக எதிர்ப்பிரதேசத்தில் நகர்த்திச்சென்றதும், நெருக்கடி வந்தபோதெல்லாம் மாற்றுநகர்வுகளுக்கு வழிகோலியதும் இவன்தான் ஆனால இதைவிட அவனிற்கு பெருமை சேர்த்தது, ஓயாத அலைகள் மூன்றின் முதலுடைப்பின் வெற்றியான ஒட்டுசுட்டான் இராணுவ தளத்தை வேவுபார்த்து திட்டமிடலுக்கு அடிகோலியதும் இவன்தான். இந்த ஆற்றல்மிக்க போர்வீரனை கொழும்புத்துறையில் நடந்த சண்டையில் நாங்கள் இழந்துபோனோம்.

நேற்றைய தினம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்ட தளபதி கேணல் சொர்ணத்தின் மற்றைய பகுதிச்சமர்க்களமான தனங்கிளப்பு, கோகிலாக்கண்டி தளங்கள் மீதான தாக்குதல் 11ம் திகதி மாலை 4.30ற்கு புதிய முனையில், புதிய தாக்குதல் உத்தியோடு தொடங்கப்பட்டது. தனங்கிளப்புத் தளத்தைப் பொறுத்தவரையில் மிக பலமான நிலைகளில் உசாரடைந்துவிட்ட எதிரியை தாக்குவது மிகக் கடினமாகிவிட்டது. ஆனால், எதிரி எமது நகர்வை அதிகம் எதிர்பார்த்திருந்த தென்திசையால் முன்னேறாது, அதன் மேற்குத்திசையால் பரந்து நீண்டிருந்த வெட்டைவெளிப்பிரதேசத்தினுடாக முன்னேற வேண்டுமென சமரின் ஒருங்கிணைப்புத் தளபதி கேணல் பானு பணித்திருந்தார். பரந்த வெளிப்பிரதேசமென்பதால் இதனுடாக நாம் முன்னேறுவதற்கான வாய்ப்பு இல்லையென்றே எதிரி கருதினான்.

மாலை 4.30க்கு கனரக ஆயுதங்களின் சூட்டுவலுவின்மூலம் முன்னணிக் காவலரண்கள் தகர்க்கப்பட, தளத்தின் உட்பகுதியில் கிட்டு பீரங்கிப்படையணி மோட்டார் பீரங்கித் தாக்குதலை மேற்கொள்ள, எதிரியின் தளம்பாய்ந்தது லெப். கேணல் குட்டி தலைமையிலான இம்ரான் - பாண்டியன் படையணி. எதிரி எதிர்பாராத பகற்பொழுதில், எதிர்பாராத திசையில், கனரக ஆயுதங்களின் சூட்டுவலுவுடன் நாம் தளம் புகுந்துவிட்டது எதிரியை திகைப்புக்குள்ளாக்கியது. எதிரி தாக்குப்பிடிக்க எண்ணவில்லை. தனங்கிளப்பிலிருந்து சாவகச்சேரி நோக்கி பின்வாங்கி ஓடத்தொடங்கினான். தளத்தில் இராணுவத்தின் உடல்கள் அங்குமிங்குமாகக் கிடந்தன. அவன் ஓடிய திசையில் பின்தொடர்ந்து தாக்கின, எமதணிகள். அந்த வீதிநெடுகிலும் எதிரியின் பல உடல்கள் வீழ்ந்தன.

தனங்கிளப்பு தளம்மீதான தாக்குதல் நடாத்தும் அதேவேளை கோகிலாக்கண்டி தளம் மீதும் தாக்குதலைத் தொடங்கியது லெப். கேணல் கசிலனின் தலைமையிலான தலைநகர் படையணி. எதிரியின் முன்னரங்க காவலரண்களில் சண்டையைத் தொடங்கிய அதேநேரம், நீரேரிப்பகுதியிலமைந்த காவலரண்கள் மீது கடற்புலிகளின் படகுகள் நெருங்கித்தாக்கின. மறவன்புலவுக்கும் தனங்கிளப்பிற்குமான வீதியில், ஊடறுத்து எமதணிகள் நிற்பதும்கூட எதிரிக்குத் தெரிந்திருந்தது. மொத்தத்தில எதிரி சூழப்பட்டு தாக்கப்பட்டுக்கொண்டிருந்தான். அவனுக்கான உதவிகள் கிடைப்பதும் வாய்ப்பற்றிருந்தது. தளத்தின் உட்பகுதியில் எமது பீரங்கித் தாக்குதல் எதிரியை திணறடித்தது எதிரி நிலைதளம்பி பின்வாங்கவேண்டிய நெருக்கடிக்குத் தள்ளப்பட்டான். காவலரண்களைக் கைப்பற்றி எமது அணிகள் உள்நுழைய, அதேநேரம் கடற்புலிகளின் அணியொன்றும் தரையிறங்கியது. எதிரி முழுமையாக தன் தளத்தை கைவிட்டு ஓடத்தொடங்கினான்.



தாக்குதல் திட்டத்தைப் பூர்த்திசெய்யும் பணியை படையணிகளுக்கு பகிர்ந்தளிக்கிறார், தளபதி கேணல் சொர்ணம்.

அடுத்து நகர்ந்த மூன்று நாட்கள் எந்த நடவடிக்கையிலும் எம்மால் ஈடுபட முடியவில்லை. ஏனெனில் எமது நடவடிக்கைப் பிரதேசம் மக்கள் செறிந்துவாழும் பகுதிகளாக இருந்தன. எனவே, அதற்கான மாற்றொழுங்குகள் செய்யப்படும்வரை நாம் காத்திருக்கவேண்டியிருந்தது. அணிகளை மீளொழுங்குபடுத்துவதிலும், வேவு நடவடிக்கையில் ஈடுபட்டு அடுத்த தாக்குதலுக்கான முனைகளை உறுதிப்படுத்திக்கொள்வதிலுமாக அந்த நாட்கள் கழிந்தன. கைதடி, நுணாவில், மட்டுவில், சாவகச்சேரி மக்களை தற்காலிகமாக தம் வசிப்பிடங்களை மாற்றியிருக்குமாறு புலிகளின் குரலில் தொடர்ச்சியாக அறிவித்தல் விடுக்கப்பட்டுக்கொண்டிருந்தது. மக்களின் உயிரிழப்புக்களை தவிர்க்க வேண்டுமென்பது தலைவரின் கண்டிப்பான கட்டளையாக இருந்தது. ஆனால், எதிரியோ, மக்களை நகரவிடாது மக்களை கேடயமாக்கினான். நகரும் மக்களைத் தாக்கினான். ஊரடங்குச்சட்டம் அமுல்படுத்தப்பட்டது. ஆனாலும் ஒவ்வொருநாளும் கிடைக்கும் ஓரிருமணித்தியால ஊரடங்குச்சட்ட தளர்த்தலில் மக்கள் இராணுவத்தின் கட்டுமீறி வெளியேறத் தொடங்கினர். மூன்றுநாட்கள்வரை இதற்காக புலிகள் தாக்குதல் எதுவுமின்றி காத்திருந்தனர். →





www.eelamview.com

15ம் திகதி மாலை 4.30ற்கு தளபதி கேணல் தீபன் புதிய பகுதியில் மற்றொரு சமர்முனையைப் பொறுப்பேற்றார். தலைநகர் படையணி, சோதியா படையணி, 4.1 படையணிகளைக்கொண்ட தளபதி லெப். கேணல் சேகரின் தலைமையில் தச்சன்தோப்பு கிராமத்தை உள்ளடக்கி அமைக்கப்பட்டிருந்த எதிரியின் காவலரண்கள் மீதான தாக்குதலுடன் தொடங்கியது அப்புதிய சமர்முனை. வலம் இடமாக இரு அணிகளாகப் பிரிந்து, எதிரியின் காவலரண்களைத் தகர்த்து முன்னேறிக்கொண்டிருந்த அணிகள், நாவற்குழி வீதியை அண்மித்தும் மற்றைய பகுதியில் கைதடி வீதியை அண்மித்தும் காவலரண்களை வெற்றிகொண்டு முன்னேறிய பின் கிராமத்தினுள்ளிறங்கிய அணிகள் மறுநாள் அதிகாலையின் முன் அக்கிராமத்தை மீட்டெடுத்துக்கொண்டன.

தச்சன்தோப்பை மீட்டெடுத்த அன்றுமாலை, கைதடி - நுணாவில் பாலத்தை அண்மித்த எமது படையணிகள், பாலத்தை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருவதற்காக மீண்டும் சண்டையைத் தொடக்கின. எதிரியோ, வலுப்படுத்தப்பட்ட நிலைகளிலிருந்து தாக்கத்தொடங்கினான். அதைவிட, அப்பகுதியின் நில அமைவு, எமக்கு எவ்விதத்திலும சாதகமாக அமையவில்லை. பாலம் அமைந்திருந்த வீதி உயரத்திலிருந்தது.

நாமோ பள்ளமான பிரதேசத்தில் நிற்கவேண்டியிருந்தது. முன்னேறும்போது எதிரிக்கு எம்மைச் சுட்டுவீழ்த்துவது இலகுவாக இருந்தது. நாம் கடுமையாகச் சண்டையிட்டும் எதிரியொரு பின்வாங்கலைச் செய்யவில்லை. இழப்பை தவிர்ப்பதற்காக அன்று அம்முயற்சியை கைவிடுமாறு கட்டளையிட்டார் தளபதி தீபன்;

17ம் திகதி அதிகாலை 6.00 மணிக்கு நாவற்குழி வீதியில பாலத்தை நோக்கியும், நாவற்குழி புகையிரதப் பாதை பாலத்தைநோக்கியும இம்ரான் - பாண்டியன் படையணியும, மாலதி படையணியும் இணைந்து முன்னேறின. தளபதி லெப. கேணல குட்டி தலைமையில் முன்னேறிய இவ்வணிகள பாலத்துற்காக கடுமையாகச் சண்டையிட்டன. பாலத்தின பின்னால் அன்ரூஸ் கொம்பனி கட்டிடத்தினுள்ளும் எதிரி பலமாக நிலைகொண்டிருந்தான. நகரச் சண்டைகளைப் பொறுத்தவரை முக்கியத்துவம்மிக்க வீதிகளையும், பாலங்களையும் கட்டுப்படுத்துவதே சமரின் வெற்றியைத் தீர்மானிக்கும திறவுகோலாக அமையும் எனவே எதிரி இப்பாலத்தின் மீதான தாக்குதலை எதிர்பார்த்தே அதற்கான தற்காப்புத் தாக்குதலுக்கான தளம் ஒன்றை அதனருகே அமைததிருந்தான்; இதைக் கட்டுப்பாட்டினுள் கொண்டுவருவதற்காக நாமும் எதிரியும் மிகக கடுமையான தாக்குதலில் ஈடுபட்டோம். எதிரி, டாங்கியையும், துருப்புக்காவியையும் பயன்படுததித் தாக்கினான. எதிரியின் நிலையில் பின்னுதைப்பற்ற பீரங்கி ( R.C.L ) கூட இருந்திருந்தது. அந்த வெளிபபிரதேசததில் எதிரியின் கடுமையான சூட்டுவலுவினூடாகவே நாம் முன்னேறவேண்டியிருந்தது. உண்மையில், நாம் எமது முன்னேறறத்திற்காக கடுமையான போருக்கு முகம்கொடுக்கவேண்டியிருந்தது. ஆனால், இன்றைய பொழுதிற்குள் கைதடி - கோப்பாய் பாலம்வரை எதிரியின் இராணுவத் தளங்களை வெற்றிகொணடு கட்டுப்பாட்டினுள் கொண்டுவருவது அவசியமான தேவையாக இருந்தது. அடுத்த சமர்முனை தொடங்கப்படுவது இதன் வெற்றியிலேயே தங்கியிருந்தது.

ஒரு நீண்ட சண்டையின் பின் காலை 10.00 மணியளவில் பாலமும் அதன் பின்னாலான இராணுவத்தளமும் எம் கைகளில் விழுந்தது. பலமான கட்டிடத் தொகுதியுள்ளிருந்த எதிரிகளைககூட எம் போராளிகள் தம பேர்த்திறனால வெற்றிகொண்டனர். தொடர்ந்து நாவற்குழி சந்தி எம் கைகளில் வீழ்ந்தபோது, தச்சன்தோப்பிலிருந்து கேணல தீபனின் அணியொன்று தனங்கிளப்பு வீதியால் நாவற்குழிக்கு முன்னேறி, எதிரி அப்பிரதேசத்தில் இலாததை உறுதிப்படுத்தி கேணல் சொர்ணததின அணியுடன இணைப்பை ஏற்படுததிக்கொண்டது.

அங்கிருந்து தளபதி குட்டி தலைமையிலான இவ்வணிகள், கைதடி தளத்தைப் பக்கவாட்டாக சுற்றிவளைப்பதற்காக நாவற்குழிக்குப் பின்னால் உள்ள வெளிப்பிரதேசத்தினூடாக முன்னேறி, கோப்பாய்ப் பாலத்தையும் பிடித்து அவ்வீதியையும் கட்டுப்பாட்டில் கொணடுவந்தன. அதேநேரம், தளபதி சேகர் தலைமையிலான மாலதி படையணி,



வெற்றிக்களிப்பு: தளபதி கேணல் பானுவுடன் போராளிகள்

4.1 படையணி ஆகியவை தச்சன்தோப்பு கிராமத்தையண்டியிருந்த தொடர் காவலரணூடாக முன்னேறி நிலையெடுத்து நாவற்குழி - கைதடி வீதியில் ஏறுவதற்கான ஒரு சண்டையைத் தொடக்கியது. அப்படைத்தொகுதி ஏறவேண்டிய இடமாக தெங்குபனம்பொருள கூட்டுத்தாபன கட்டிடத் தொகுதியும், நவீல்ட் பாடசாலை கட்டிடததொகுதியும கொண்ட ஒரு கட்டிடப்பிரதேசம் இருந்தது. ஒரு கட்டிடப்பிரதேசத்தில் எதிரி நிலைகளை வெற்றிகொளவது சாதாரணமானதல்ல. ஆனால், அதை வெற்றிகொணடே ஆகவேண்டிய கட்டளை அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது.

11.00 மணிக்குத் தொடங்கிய இதற்கான சண்டை 4.00மணிவரை உக்கிரமாக நடந்தது. மாலை 4.00 மணிக்கு அப்பகுதியை வெற்றிகொண்ட அப்படைத் தொகுதி கைதடி நோக்கி முன்னேறியது. கைதடி தளத்தில் நிலைகொண்டிருந்த எதிரி, தாம் தாக்குதலுக்குள்ளாவதோடு கோப்பாய்ப் பாலத்தில நாம் நிலையெடுததிருந்ததையும தெரிந்துகொண்டான். எதிரியால் அங்கு நிலைகொளவது முடியாததாயிற்று. நிலைகொண்டால் அவனது தலைவிதி எங்கள் கையில். எதிரி தளததை கைவிட்டு பின்வாங்கி ஓடினான். தளம எம்கைகளில் வீழ்ந்தது. நேற்று கைதடி - நுணாவில் பாலத்திற்காக முயன்று நிறுத்திவைக்கப்பட்ட சணடை

கைதடி வீதியிலிருந்து தொடங்கியது. கைதடி வீதியிலிருந்து முன்னேறிய சேகரின் அணி இப்பாலத்தைக் கட்டுப்பாட்டினுள கொண்டுவந்தது. ஆயினும் அங்கிருந்து சாவகச்சேரி நோக்கி முன்னேறுவது அன்று தடைப்பட்டது. பாலததை அடுததிருநத எதிரியின் மினிமுகாம் எமது முன்னேற்றததை உறுதியாக தடுத்து நின்றது. அம்மினிமுகாமை வெற்றிகொள்வதற்கு வீதுயாலமட்டும் நகரக்கூடிய சூழலே அங்கு அமைநதிருந்தது; அதனை வெற்றி கொளவதாயின் எதிரியின் கடுமையான எதிர்பபுக்கு முகங்கொடுக்க வேண்டியதுடன் அதன வெற்றிககு குறித்த இழப்புகளையும கொடுகக நேரிடுவது தவிர்கக முடியாததே. இதைத் தவிர்க்க விரும்பிய சமரின் ஒருங்கிணைப்புத தளபதி கேணல் பானு அடுதத உத்தரவுவரை அன்றைய படைநகர்வை நிறுததுமாறு கட்டளையிட்டார்.

18ம் திகதி தளபதி கேணல் கருணாவுடன் புதிய அணிகளை, புதிய தாக்குதல் நகர்வுத் திட்டத்தோடு சமர்முனைக்கு அனுப்பிவைத்தார் சமரை நேரடியாக வழிநடததும் தலைவர் அவர்கள். தளபதி கேணல் கருணாவின் கட்டளையில் லெப். கேணல் இனிதன்(தாத்தா) தலைமையிலான ஜெயந்தன், அன்பரசி படையணிகள் 18ம் திகதி நள்ளிரவு 12.00 மணிகழித்து 12.30ற்கு கைதடி வடககு பிரதேசததிலிருந்து எதிரி முன்னணிக் காவலரணகள் மீது சண்டையைத் தொடக்கின

ஒரே சமரிலேயே பகலிலும், இரவிலும் சண்டையைத் தொடக்கி. வெற்றிகொள்ளக்கூடிய போராற்றலையும், தந்திரோபாயத்தையும் நாம் கொணடிருப்பது எதிரிக்குத் திகைப்பையும், சலிப்பையுமூட்டியது. தாக்குதல் நேரமென்றில்லாது ஒவ்வொரு கணப்பொழுதும எதிரி எம் வரவை எதிர்பார்க்கவேண்டியிருந்தது.

அன்றைய இருளில் தொடங்கிய சண்டையில் எதிரியின் காவலரண்களைத் துடைத்தழிதது உட்புகுந்தனர் புலிகள். ஓரணி தொடர் காவலரண்களை வெற்றிகொளள, மற்றைய அணிகள் அங்கிருந்து தொடர்ந்து முன்னேறி மட்டுவில்சந்தி பாடசாலைவரை சென்றடைந்தது. இப்பிரதேசங்களில் நிலைகொண்டிருந்த எதிரிகள் புலிகளின் வரவறிந்து தம் தளங்களுக்குத் தப்பியோடினர். முன்னேறிய ஜெயந்தன், அன்பரசி படையணிகள் மட்டுவில பாடசாலையடியில் மேலும் இருஅணிகளாகப் பிரிந்து கனகபுளியடிச்சந்தியை நோக்கியும், மட்டுவிலிலிருந்து நுணாவில் சந்தியை நோக்கியும முன்னேறின. நுணாவில்சந்தியை வந்தடைநத அவ்வணி நாவற்குழி நோக்கி கண்டிவீதியால் முன்னேறத்தொடங்கியது எதிரி நிலைகளைத் தாக்கியழித்தவாறு முன்னேறிவந்த அவ்வணி நேற்றைய தினம வெல்லப்படாதிருந்த பாலத்திற்கருகாமையிலான அந்த மினிமுகாமைத் தாக்கத்தொடங்கியது. எதிரி சற்றும் இதனை எதிர்பார்க்கவில்லை: நேற்றைய எம் முயற்சி கைவிடப்பட்டது எதிரிப் படைத்தலைமைக்கு நம்பிக்கையளிப்பதாக இருந்தது. ஒருநாள் பொழுதிற்குள் எம்மால் இத்தகைய ஒரு பாரிய முன்னேற்றத்தை செய்யமுடியுமென்று அவன் நம்பியிருக்கவில்லை. ஆனால இப்போது பெரும் பிரதேசத்தை மீட்டு பின்புறமாக எதிரியைத் தாக்கத்தொடங்கினோம். எதிரி திகைத்து அத்தாக்குதலுக்கு முகம்கொடுக்க முடியாது பின்வாங்கத்தொடங்கினான். கைதடி வடக்கு ஊடாகளினூடாக உயிரிருந்த எதிரிகளெல்லாம ஓடித்தப்பினர்; பாலத்தை அடுத்துநின்ற சேகரின் அணியும், முன்னேறிச்சென்ற இனிதனின் அணியும கைகுலுக்கிக்கொண்டன.

நுணாவில் சந்தியிலிருந்து இனிதனின் அணி மீண்டும் கனகம்புளியடிச்சந்தி நோக்கிச்செல்ல அங்கிருந்து மாலதி படையணியும், 4.1 படையணியும் உள்ளிட்ட சேகர் தலைமையிலான படைத்தொகுதி சாவகச்சேரி நகரை வெற்றிகொளவதற்காக முன்னேறியது.

இதற்கிடையில் கண்டிவீதி எமது கைகளில் விழுவதை உணர்ந்துகொண்ட எதிரியின் படைத்தலைமை உடனடியாக கனகம்புளியடியிலிருந்து புத்தூர் நோக்கிச் செல்லும வீதியைப் பாதுகாக்க விரும்பியது; அதற்கான பாதுகாப்பு நிலைகளை அமைப்பதற்காக எதிரியின் ஒரு படைத்தொகுதி வீதியால் முன்னேறிக்கொண்டிருந்தது. இதைப் பாதுகாப்பதனூடாகவே வலிகாமத்துடனான இறுதி விநியோக வழியை எதிரி தக்கவைக்கமுடியும். ஆனால், அன்றிரவே எமது தாக்குதல அணியொன்று அவ்வீதியில் →



www.eelamview.com

உள்ள 'வண்ணாத்திப் பாலத்தையும்' அப்பகுதி வீதியையும் கட்டுப்பாட்டினுள் கொண்டுவந்திருந்தது. இதை எதிரி அறிந்திருக்கவில்லை. இப்போது முன்னேறிய இராணுவத்தைத் தாக்கத் தொடங்கியது எமது அணி. ஒரு கடுமையான சண்டையின்பின் எதிரி இறந்த தனது 19 சகாக்களின் உடல்களையும் கைவிட்டுவிட்டு எதிரி பின்வாங்கிக்கொண்டான்.

அந்தக் கண்டிவீதியில் நேற்றுவரை சோதனைச்சாவடியிலிருந்து, மினிமுகாம்களிலிருந்து எம்மக்களின் உடல்களை வருடி சோதனை செய்து, தான் விரும்பிய கேள்விகள் எல்லாம்கேட்டு, அடையாளப்படுத்த ஆயிரம் அட்டைகள்கேட்டு திமிர்த்தனத்தோடு உலாவந்த எதிரிகள் எம்வரவறிந்து ஓடிக்கொண்டிருந்தனர். புலிகள்சேனை நகரைநோக்கி நகர்ந்துகொண்டிருந்தது.

சாவகச்சேரி நகரை அண்மித்தபோது மாலை ஐந்து மணியிருக்கும். தபாற்கந்தோர் வீதிக்குக் குறுக்காக, ஓடிய எதிரிகளும் நகரில் தளமமைத்திருந்த எதிரிகளும் தடுப்பரணமைத்து அந்த நிறைந்த கட்டிடத் தொகுதிகளை தமக்கு வாய்ப்பாக பயன்படுத்தி எம்மை எதிர்க்கத்தொடங்கினர். எதிரி எத்தகைய எதிர்ப்பைத்தன்னும் காட்டினாலும் இலக்கை இழந்துவிட புலிகள் தயாரா? அப்பகுதியில் கடுமையான சண்டையிலிறங்கின இருதேசத்தின் படைகளும். ஒன்றரை மணித்தியால சண்டையின்பின் எதிரியின் தடுப்பை உடைத்து உள்நுழைந்த புலிகள் கட்டிடங்களைக் காப்பாகப் பயன்படுத்தி வேகமாக அந்த நகர்ப்பகுதியெங்கும் நுழைந்துகொண்டனர். எதிரி எதிர்ப்புவரும் இடத்தைக்கூட சரியாகக் கணிக்கமுடியாது தடுமாறினான். தமக்குள் தொடர்பில்லாது சிதறுண்டான். உயிர்தப்பிய எதிரிகள் ஓடத்தொடங்கினர். நகர் எம்கையில் வீழ்ந்தது. அப்போது நேரம் மாலை 7. 00 மணியாகியிருந்தது. அன்றைய தினம் யூன் 19.

மறுநாள் மீட்கப்பட்ட பிரதேசத்தினுள் மக்களிடமிருந்து உணவு வந்தது. நடவடிக்கையில் ஈடுபட்ட சிலநாட்களாக நீரேரி கடந்து விநியோகம் வரவேண்டியிருந்ததால் பாதுகாக்கப்படக்கூடிய உணவுகளையே தொடர்ந்து உண்ண வேண்டியிருந்தது. அந்த உணவுதந்த சலிப்பில் எங்கள் நாக்கு திணறியபோது ஆட்டுக்கறியுடன் வந்த சோறு அமிர்தமாய் இருந்தது. போராளிகளைக்கண்ட பூரிப்போடு தங்கள் நான்கு வருட ஆதங்கத்தை அன்றே கொட்டிவிடத்துடித்தார்கள் எம்மக்கள். தெரிந்த போராளிகளை, உறவுக்கார போராளிகளைக் கண்டபோது அவர்களடைந்த மகிழ்ச்சி மட்டற்றது.


ஒரு ஐயா சொன்னார், " நுணாவில் ரோட்டில வழமையாய் செக்பண்ணிற ஆமி செத்துக்கிடந்தான் தம்பி. உங்கட ஆக்களிட்ட அதுக்கை துவக்கும் கிடக்கண்டு காட்டினான். அவையள், அதைஎடுக்கப் பிறகு வேறயாக்கள் வருவினம் எண்டு சொல்லிப் போட்டு போட்டினம். உங்களுக்கு இப்ப உதுகள் சின்னச் சாமாங்கள்போல ... " என்று கூறிக்கொண்டே சிரித்தார். அதில் ஆச்சரியமுமிருந்தது.

இன்னுமொரு வீட்டில் நாற்பத்தைந்து வயது மதிக்கத்தக்க குடும்பஸ்தர் ஒருவருடன் கதைத்துக்கொண்டிருந்தோம். இடையில் எழுந்து உள்ளே சென்றவர் சில அட்டைகளை கையில் கொண்டுவந்து கிளித்துப்போட்டார். " நாசமாய்ப்போன காட்டெல்லாம் இண்டையோட துலைஞ்சுபோகட்டும். தம்பி என்ர அண்ணன்ர பெட்டை எங்கட வீட்ட வாறதெண்டால், இஞ்சத்தய கொமாண்டரிட்ட போய் அவையள் தந்த அட்டையைக்கொடுத்து பதிஞ்சுபோட்டுத்தான் வரவேணும். நல்ல விளையாட்டு, எளிய _ " அவர் ஆத்திரத்துடன் திட்டிக்கொண்டிருந்தார். அந்த நிலத்தை மீட்டதிலும், இனி மீட்கப்படவிருக்கும் யாழ் மண்ணிற்காகவும் எங்கள் உணர்வுகளுள் உத்வேகம் பொங்கிவழிந்தது.

23ம் திகதி சாவகச்சேரியிலிருந்து முன்னேறிய சோகியா, தலைநகர் படையணிகள் பெருங்குளம் சந்தியைக் கைப்பற்றியதும், எம்மால் மீட்கப்பட்ட பிரதேசத்தை தக்கவைப்பதற்கான தற்காப்பு நிலைகளை அமைப்பதில் எமது படையணிகள் அவசரமாக ஈடுபட்டன.

ஓயாத அலைகள் - 03 கட்டம் V நடவடிக்கை, யாழ்குடாநாட்டு மீட்பிற்காக புலிகள் தொடங்கவிருக்கும் பெரும் சமரிற்கான இயங்குதளத்தைப் பெற்றுக்கொள்ளும் தன் இலக்கை வெற்றி கொண்டது. கட்டம் III இல் கிழக்கரியாலை, தனங்கிளப்பு ஆகிய குறுநிலங்களை மீட்டு தக்கவைத்ததன் மூலம், எம்மால் இத்தகையதொரு படைநகர்த்தலை மேற்கொள்ள முடிந்தது அடுத்து யாழ்குடாநாட்( இராணுவத்தின் பெரும் பலம்மீது போர் தொடுப்பதற்கான இயங்குதளத்தைப் பெற்றுக்கொள்வது எமது உடனடித் தேவையாக இருந்தது. மருத்துவம், விநியோகம், சேமயிருப்பு அணிகள், ஆயுதக் களஞ்சியம், மோட்டார், ஆட்டிலறித் தளங்கள் ஆகியவற்றை உள்ளடக்கக்கூடிய ஒரு தளப்பிரதேசத்தை கைப்பற்றி, அச்சுறுத்தலற்றவகையில் தக்கவைப்பதே 30. 000ம் தொகைகொண்ட யாழ்குடாநாட்டு படையினர் மீதான சமரிற்கு ஆதாரமாக அமையும், அதில் முக்கியமானது, யாழ்குடாநாட்டில் நிலைகொண்டுள்ள எந்த இராணுவத் தளம்மீதும் ஆட்டிலறித் தாக்குதல் நடாத்தக்கூடிய நிலப்பரப்பை மீட்பதனூடாகவே குடாநாட்டை வெற்றிகொள்ளும் பெரும் சமரிற்கான படைநகர்த்தலை எம்மால் செய்யமுடியும் என்பதே. அதற்காக தலைவரால் வரையப்பட்ட திட்டமிடலின்படி தேவையான நிலவிஸ்தீரணத்தை மீட்டெடுத்துக்கொண்டனர் புலிகள்.

ஆனால், எம்மால் மீட்கப்பட்ட பிரதேசத்தை மீளக் கைப்பற்றிவிட இருதடவை இருமுனைகளில் எதிரிப் படைத்தலைமை தன்பலத்தையும், வளத்தையும் பிரயோகித்துப் பார்த்தது.






www.eelamview.com

28ம் திகதி அதிகாலை 5. 30 ற்கு கொழும்புத்துறை பகுதியூடாகவும் 09ம் திகதி காலை 5. 50ற்கு கனகம்புளியடிப் பகுதியிலிருந்து மூன்று திசைகளிலும் எதிரி முன்னேற முயன்றான் ஆனால், இத்தகைய முன்னேற்ற முயற்சியை எதிர்பார்த்திருந்த புலிகள் அதைத் துணிகரமாக எதிர்கொண்டு மீளக் கைப்பற்றும் எதிரிப்படைத்தலைமையின் எண்ணத்திற்கு சிதைமூட்டினர். புலிகள் பற்றிய தப்பான கணிப்பீட்டினால் பெருந்தொகையான இராணுவத்தினரை எதிரி இந்த முன்னேற்ற முயற்சிகளில் பலிகொடுக்க வேண்டியிருந்தது. அவர்கள் பெற்றுக்கொள்வதற்கு தங்களின் உடல்களைத் தவிர வேறொன்றும் அங்கு இருக்கவில்லை. புலிகளால் இந்நடவடிக்கையில் மீட்கப்பட்ட பிரதேசம் யாழ்குடாநாட்டுப்படையினரின் மீட்சியற்ற பொறிக்கு வியூகம்வகுத்தது.

ஏற்கனவே யாழ்ப்பாணத்தின் தெற்குப் புறத்தில் வன்னியுடனான தரைத்தொடர்புடன், நாகர்கோவில் - எழுதுமட்டுவாள் இணைந்த பகுதியில் எமது நிலைகள் அமைந்திருந்த நிலையில், இந்த நடவடிக்கையின் முடிவில் கொழும்புத்துறை, கைதடி, மட்டுவில், சாவகச்சேரியென இணைந்த ஒரு தளப்பிரதேசத்தை நாம் கைப்பற்றியதன் மூலம் பக்கவாட்டாக பலமான ஒரு புறப்படு தளத்தை அமைத்துக்கொண்டோம். அத்துடன் பலாலி, காங்கேசன்துறை ஆகிய கேந்திர முக்கியத்துவமிக்க தளங்கள் மீதும், யாழில் எந்தப் பிரதேசம் மீதும் எறிகணைத் தாக்குதல் நடாத்தக்கூடிய, எத்திசையில் முன்னேறும் எமது அணிகளுக்கும் மோட்டார்,



களமருத்துவம்: புண்சுமந்த புலிவீரனுக்கு மருத்துவம்செய்யும் பெண்புலி!

ஆட்டிலறி சூட்டாதரவை வழங்கத்தக்க தூரத்தில் எங்கள் இயங்குதளத்தைப் பேணிக்கொண்டோம். அதேநேரம் யாழ்ப்பாண இராணுவம் தன் இருப்பிற்குத் தங்கிநிற்கும் கடல்வழி விநியோகத்தின் மீது உறுதியான அச்சுறுத்தலை வழங்கக்கூடியவாறு கடல்சார் போர் நடவடிக்கைகள் வலுப்படுத்தப்பட்டன. இலங்கை இராணுவத்தின் தாக்குதற் போர்வலு யாழ்ப்பாணத்தில் குவிக்கப்பட்டுள்ள நிலையில், அதன் மீதான புலிகளின் போர்வியூகம், உடைக்கப்பட முடியாத பூட்டாக இறுக்கப்பட்டு புதிய வடிவெடுத்துள்ளது இன்று. நாளைய அதன் தலைவிதியைத் தீர்மானித்துவிட, தலைவரிடமிருந்துவரும் திட்டத்திற்கும், கட்டளைக்குமாக பொறுத்திருக்கிறது போர்க்களம். பகைவன் மூச்சிழந்த காற்றில் தன் பறப்பிற்காகக் காத்திருக்கிறது புலிக்கொடி. வீரப்புலிகளின் வெற்றிப் பரணியையே இனித் தமிழர்தேசம் பாடும். O

( 05ஆம் பக்கத்தொடர்ச்சி )

## ஆட்டம் காணும்..

படகுகளை அழைத்தபடி லெப். கேணல் பழனியின் தலைமையிலான பிரதான

படகுத்தொகுதி களத்தில் பிரசன்னமாகியிருந்தது. பிரதான விநியோக கப்பலின் பாதுகாப்புக் கலங்களை எதிர்கொண்டு, வியூகமிட்டு அவற்றை கப்பலிலிருந்து அப்புறப்படுத்தி கரும்புலித் தாக்குதலுக்கு வாய்ப்பான சூழலை உருவாக்குவதே லெப். கேணல் பழனியின் பிரதான படகுத்தொகுதியின் இலக்கு. இதேவேளை பருத்தித்துறையிலிருந்தும், திருமலையிலிருந்தும் எதிரிக்கு கிடைக்கக்கூடிய மேலதிக உதவிகளை தடுத்து நிறுத்துவதற்கும், சண்டையில் ஈடுபடும் எமது படகுத்தொகுதிக்கு பாதுகாப்பளிப்பதற்குமாக லெப். கேணல் அமுதசுரபி, லெப். கேணல் செழியன் ஆகியோரின் தலைமையில் இரு படகுத்தொகுதிகளும களமிறங்கின.

இரண்டு மணித்தியாலங்களையும் கடந்தும் கடற்சமர் நீண்டது. களத்தின் இயற்கை நிலைகூட எதிரிக்கு சாதகமாயிருந்தது. காற்று மோசமாக வீசியது. கடலலைகள் மேலெழுந்து ஆவேசமாய் ஆர்ப்பரித்தன. எதிரியின் நவீனமான பாரிய கலங்களுக்கு இச்சூழலை எதிர்கொள்வது அவ்வளவு கடினமானதல்ல. எம்மைப் பொறுத்தவரை உடல், மனபலத்தாலேயே கடினமான ஆழ்கடற் சூழலில் நின்றுபிடிக்க வேண்டியதாயிற்று. ஒருபுறம் எதிரிக்கும், மறுபுறம ஆர்ப்பரிக்கும் கடலுக்குமாக அந்த ஆழ்கடலில் கடற்புலிகள் சமர்புரிந்தனர்.

நேரம் 1.30 ஐ தாண்டியிருந்தது. வியூகமிட்டிருந்த கடற்புலிகள் படகுகள் சண்டையின் ஒரு முனையில் தமக்கு சாதகமான நிலையை எட்டியிருந்தன. வாய்ப்பானதொரு தருணம். களத்தில் தேடிய இலக்கு கரும்புலிகளுக்கு வாய்ப்பாக பொருந்திவிட்டது. லெப். கேணல் ஞானக்குமாரின் கரும்புலிப்படகுக்கான கட்டளை வழங்கப்பட்டாயிற்று பொங்கும் அலைகளை கிழித்து ‘ உகண ’ விநியோகக் கப்பலை நெருங்கியவாறு மின்னலென பறந்தது கரும்புலிப்படகு. அதில் ஞானக்குமாருடன் கூடவே மேஜர் சூரன், மேஜர் சந்தனா, கப்டன் பாமினி ஆகிய கரும்புலிகளும். விநியோகக் கப்பலிலிருந்து எதிரி பேரச்சத்துடன் நடாத்திய தாக்குதல்களையும் வென்றபடி கரும்புலிகள் படகு அதில் மோதி பேரொ(ளி)லி யென வெடித்தது. எதிரிககப்பல் ஆட்டங்கண்டது. அதன் வேகம் சரிஅரைவாசியெனக் குறைந்தது. எப்படியாவது பேரபாயத்திலிருந்து மீண்டுவிடத்துடித்த அது தள்ளாடித் தள்ளாடி தன்னால் இயன்றவரை நகர முனைந்துகொண்டிருந்தது.

இப்போது விநியோகக் கப்பலை முற்றாக மூழ்கடிக்க வேண்டுமாயின் மேஜர் நல்லப்பனும், கப்டன் இளமதியும் ஓட்டிச்செல்லும் கரும்புலிப்படகு கப்பலை நெருங்குவதற்கான வாய்ப்பான சூழலை உருவாக்க வேண்டும். கப்பலிலிருந்து எதிரி கனரக ஆயுதங்களால் தாக்கியபடியிருந்தான். மீண்டும் வியூகமிட்டன கடற்புலிகள் படகுகள். சுமார் அரைமணி நேரம் நீடித்த சமரின் முடிவில் நல்லப்பனும், இளமதியும் காத்திருந்த தருணம் கைகூடியது. கடற்புலிப் படகுகள் பாதுகாப்பளிக்க எதிரிக்கலங்களின் பீரங்கிக்குண்டுகளில் நீக்குளித்தபடி கரும்புலிப் படகு கப்பலில் மோதி வெடித்தது. ‘ உகண ’ வில் மீண்டும் பொறுத்த இடி! இனியும் அதனால் தாக்குப்பிடிக்கவே முடியாது. மிதந்துகொண்டிருந்த அந்த ஆயுதக்களஞ்சியம் தன் முடிவிடத்தினைச் சென்றடையக்கூடிய தொலைவிலேயே உள்ளிருந்த தன் வெடிபொருட்களால் வெடித்துச் சிதறத்தொடங்கியது. அவர்கள் முல்லைத்தீவு கடற்பரப்பை கடந்ததும் பெருமூச்சுவிட்டு நிம்மதியடைந்திருப்பர்.

தாம் குறிவைத்த இலக்கை நீண்டநேர சமரின்பின் வெற்றிகொண்ட கடற்புலிகளின் அன்றைய இறுதி நடவடிக்கை, பாதுகாப்பாக தம் தளம் திரும்புவதாக இருந்தது. அதற்காக கடற்புலிகள் நீண்டதூரம் பயணிக்க வேண்டும். அதிலும் குறித்தளவு தூரம் ஆழ்கடலில். அபாயம் நிறைந்ததாக ஏற்கனவே கருத்திலெடுக்கப்பட்டிருந்த அந்த நடவடிக்கை மீது எதிரி சவால்விடுத்தான். தன் குகைவந்து மீளும் புலிகளைப் பாதுகாப்பாக திரும்ப அனுமதிப்பதென்பது சிங்கள கடற்படையின் தன்மானத்திற்கு பேரிழுக்கல்லவா! நேரம் சரியாக அதிகாலை 4. 00 மணி. சரியாக 30 கடல்மைல் உயரம். எதிரியின் உதவிப்படகு அணிகளை தடுத்துநிறுத்தும் பணியில் ஈடுபட்டு லெப். கேணல் பழனியின் படகுத் தொகுதியுடன் தளம்திரும்பிக்கொண்டிருந்த லெப். கேணல் அமுதசுரபி, லெப். கேணல் செழியன் ஆகியோரின் படகுத்தொகுதிகளை எதிரியின் டோறாக்கள் வழிமறித்தன.


மீண்டும் மூண்டது கடற்சமர்! தம் பணிமுடித்த கடற்புலிகளுக்கு பாதுகாப்பாக கரைதிரும்புவதே தற்போதைய இலக்கு. தம் ஆயுதக்களஞ்சியமாய் வந்த விநியோகக்கப்பலை தம் குகையில் வைத்தே பறிகொடுத்த கடற்படைக்கு கடற்புலிகளின் படகுத்தொகுதிகளை முற்றாக அழித்து பழிதீர்ப்பதைத் தவிர வேறு நோக்கம் இருக்கவே முடியாது! எனினும் எதிரியை சுலபமாக எதிர்கொண்டபடி தந்திரோபாய நகர்வுகள் மூலம் பாதுகாப்பாக கரைதிரும்பினர் கடற்புலிகள். ஈற்றில் தன் பழிவாங்கும் முயற்சியிலும் மூக்குடைபட்ட எதிரி பின்வாங்கவேண்டியதாயிற்று. அதிலும் சேதமடைந்த டோறா ஒன்று கடற்புலிகள் கொடுத்த அடியின் வடுக்களை சுமந்தபடி புகைத்தவாறு போய்க்கொண்டிருந்தது.

கடலில் ஓர் அச்சுறுத்தும் போரை மட்டுமல்ல மரபுசார் போரையே நடாத்தக்கூடிய ஆற்றலை தாம் பெற்றுவருவதை இச்சமர்களில் கடற்புலிகள் நிரூபித்தனர்.

புலிகள் கொண்டுள்ள இக்கடற்போர்ப்பலத்தால் குடாநாட்டில் குவிக்கப்பட்டிருக்கும் சிங்களத்தின் போர்வலு அஸ்மா நோயாளியின் நிலையாகிவிட்டது, குடாநாட்டு ஆக்கிரமிப்பின் இருப்புக்கான முயற்சித்தலுக்கும் அங்கு குவிக்கப்பட்டுள்ள படை வலுவின் பாதுகாப்பிற்குமிடையே முடிவுகாணமுடியாது போராடிவரும் சிங்களத்தின் தலைமையின் எண்ணத்தில் இது புலிகள் விழ்த்திய பேரிடியாகும். குடாநாட்டில் நிலைகொள்ளும் பேரினவாத அவாவிற்கு இதையொரு கெட்ட சகுனமாகவே படைத்தரப்பு கருதிக்கொள்ளும். ஆனாலும், விடாப்பிடியாக நிலைகொள்ளும் அதன் முயற்சி சந்திக்கவிருக்கும் விளைவு புலிகளின் இப்பலத்தில் இருந்தே அர்த்தங்கொள்ளும். O



www.eelamview.com



# ஒரு முடிவுக்கான தவிப்பு

- அகிலன் -

அந்தப்பொழுது பற்றிய நினைவுகள் நெஞ்சை அழுத்தியபடி இருந்தது. நேரம் நெருங்க நெருங்க நெஞ்சறை பிழந்து இதயம் வெளியே பாய்ந்துவிடும் போலிருந்தது. எதிரி குதறியெறிந்துவிட்டுப் போன அந்த வீட்டினுள் நேர்த்தியாக அமைக்கப்பட்ட பதுங்ககழியினுள் நிசப்தம் குடிகொண்டிருந்தது. ஓயாது இயங்கியபடியேயிருந்த தொலைத்தொடர்புக் கருவிகள் அடுத்த சில நிமிடங்களுக்காய் மௌனம் கா த்தன; சூழ இருந்த போராளிகளைப் போலவே.

ஆனையிறவுத் தளம்மீதான ஓயாத அலைகளின் பாய்ச்சலின் வெற்றியை நிறைவுபடுத்தும் உன்னதமான வரலாற்று நிகழ்வொன்றிற்கான இறுதிப் பாய்ச்சலுக்காய் புலி அணிகள் தயாராகிவிட் டிருந்தன. ஆனையிறவின் உயிர்நாடியில் புற்றுநோயெனப் புகுந்து எரிமலையென குமுறியெழுந்து எதிரியின் பாய்ச்சல்களையெல்லாம் புஸ்வாணமாக்கி, வெற்றிக்கு வழிசமைத்து இத்தாவிலில் காத்திருக்கும் வீரர்களுடன் இணைவதற்காய், ஆனையிறவை வென்றெடுத்த வீரர்கள் நகர்ந்துகொண்டிருந்தார்கள். அவர்கள் தரையிறக்கப்பட்டதிலிருந்து அவர்களுடனான இணைவிற்காய் இன்றுவரை காத்திருக்க எங்களால் முடிந்தது வியப்பளித்தது: இப்போது ஒவ்வொரு நிமிடங்களும் ஏனோ நீண்டுசெல்வது போலிருந்தது.

கடந்துபோன இருநாட்களும் இப்படித்தான் எங்களை சீண்டிப்பார்த்துவிட்டுப் போயிருந்தது. நம்பிக்கையளித்த அந்த நாட்களால் இறுதியில் ஏமாற்றத்தையே தரமுடிந்தது. இன்றைய நாள்பற்றிய எமது அங்கலாய்ப்பை அதிகரித்திருந்தது. தனது சிப்பாய்களின் அவலம்பற்றி தாம் இன்னமும் அக்கறைகொண்டுவிடாமையை எதிரித் தலைமை எமக்கு உணர்த்தியிருந்தது. மரணத்துள் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டிருந்த எதிரி மூர்க்கமாய் மோதுவான். அனால். '' ஆனையிறவை விட்டாப்பிறகும் உதுல நிக்கிறவங்களுக்கு அவ்வளவு திமிர்தானே, இண்டைக்கு இரண்டில ஒருமுடிவு காணவேண்டும், அடிச்சுக்கலைக்கிறம் இல்லாட்டி அவங்கள் எங்கள் எல்லாரையும் முடிக்கவேணும்'' என்று கூறிவிட்டு. இறுதி நகர்விற்காய் புறப்பட்டுப்போன வீரர்களின் உறுதி மனதிற்கு ஆறுதல் அளித்தது. அவர்கள் சொன்னதில் முன்னையது நடந்தே ஆகவேண்டும். பின்னையது நடந்துவிடவே கூடாது. இன்றில்லாவிடினும்

அடுத்த தினங்களில் அந்த வெற்றி பெறப்பட்டுத்தான் தீரும், ஆனாலும் அது இன்றைய நாளாய், இந்த மணித்தியாலமாய் அமைந்துவிடவேண்டும் என்பதே எல்லோருடையதும் தவிப்பு. எம் உணர்வுகளை பாரமாய் அழுத்திக்கொண்டிருப்பது ஒரு தசாப்த வரலாற்றுச் சுமையின் முடிவல்லவா! அந்த தசாப்த நினைவுகள் சுகமளிக்கவில்லை. ஆவேசமாய் எங்களை எழவைத்தது:

அது 1991இன் நாட்கள். முடிந்துவிட்ட அந்த தசாப்தத்தின் முற்பகுதி. ஆனையிறவுத் தளத்தை வீழ்த்திவிட புலிவீரர்கள் நகர்ந்துகொண்டிருந்த நாளொன்று. சேறும், சகதியுமாயிருந்த பகுதியொன்றினூடே நகர்ந்துகொண்டிருந்தது பெண் போராளிகளின் அணி ஒன்று. அவர்களைக் கடினப்படுத்திய சிக்கலான நகர்வு அது. வெற்றியின் ஆனந்தத்திற்காய் துன்பத்தைச் சகித்து நகர்ந்தார்கள் அந்த வீரர்கள். கடுமையாய் சிரமப்பட்ட ஒரு போராளியிடம் அருகே வந்த தோழியொருத்தி சொன்னாள் '' சந்தோசத்தோட வா தங்கச்சி, சண்டை முடிஞ்சு வெற்றியோட நாங்கள் திரும்பி வரேக்குள்ள இந்த சேற்றுக்குள்ளாலையும், சகதிக்குள்ளாலையும் வரமாட்டம். கண்டி றோட்டால ஆனந்தமாய் வருவம். '' ஆனால், சண்டை முடிந்தும் வெற்றி கைகூடாது மீண்டும் அதே சகதிக்குள்ளால் நடந்துகொண்டிருந்தாள் அந்த போராளி. இப்போது அவளருகே, அவளுக்கு நம்பிக்கையூட்டிய தோழியும், கூடவே இன்னும்பல தோழிகளும் இருக்கவில்லை. அப்போது அந்தப் போராளியினுள் கனத்த இதயம் இப்போதும் எங்கள் எல்லோருள்ளும் கனத்தபடி இருக்கிறது. ஆனால், இன்று அதன் கனதிதான் எத்தனை மடங்கு அதிகமாகிவிட்டது.

அது கடந்த ஏப்ரல் மாதத்தின் முதலாம்நாள். தரையிறங்கிய அணிகள் தாக்குப் பிடித்து ஆறுநாட்கள் ஆகிவிட்டன; அந்த மாலைப்பொழுது இப்போதும் நினைவில் நிற்கிறது. இயக்கச்சி முகாமின் காவலரண்களை தகர்த்து எதிரிக்குள் ஊடுருவப்போகும் போராளிகளுடன் தளபதி கதைத்துக்கொண்டிருந்தார். அன்றைய இரவின் சண்டைக்காய் நகரும்போது என் அருகிருந்த போராளியொருவனின் நினைவு என்னை இப்பொழுது துன்புறுத்துகிறது. தலைவர் போராளிகளுக்காய் அனுப்பிவைத்திருந்த கண்டோஸ் ஒன்றை தனது சட்டைப் பையினுள் அவன் வைத்தபோது '' ஏன்ராப்பா அதை பத்திரமாய் வைக்கிறாய், தற்செயலாக ஏதும் நடந்தாலும் '' என்று கூறிய அருகிருந்த தோழனுக்கு '' அது சண்டை முடிஞ்சு உள்ளுக்க தரையிறங்கி நிக்கிற எங்கட பொடியளைச் சந்திச்சு ஆனையிறவ பாக்கிறதுக்காக அவங்களை கண்டிரோட்டால கூட்டிக்கொண்டு வரேக்குள்ள எல்லோருமா பறிபட்டு சந்தோசமா சாப்பிட வேணும்.'' என்று அதை பத்திரமா வைத்தவன், வெற்றி கைகூடாது. கூடவே பல தோழர்களுடன் திரும்பி வராமலே போனபோது கனத்த இதயம் இப்போதும் கனக்கிறது.

'' உங்கள கடலால கொண்டுபோய் இறக்கிறன், ஆனால், நீங்கள் வரேக்குள்ள கண்டிரோட்டாலதான் வரவேணும'' என்று தலைவர் சொல்லியனுப்பியதையே எண்ணியெண்ணி எதிரியின் எரிமலைகளுள் தீக்குளித்திருக்கும் போராளிகள் இப்போது காத்திருக்கிறார்கள். '' நான் உங்கள சாதிக்கத்தான் அனுப்பிறன, சாகிறதுக்கில்லை '' என்று சொல்லியனுப்பிய தலைவரின் பிள்ளைகள் சாதித்துவிட்டுக் காத்திருக்கிறார்கள். '' அண்ண சொன்னமாதிரியே நிறைய சாதிச்சுப்போட்டு கண்டிரோட்டால போய் நாங்கள் இஞ்ச செய்ததுகளையெல்லாம் அவருக்கு சொல்லவேணும் '' என்றே தங்கள் உயிரின் இறுதித்துளிவரை சொல்லிச் சொல்லியே சாதித்துக்குவித்த போராளிகளின் இழப்புக்களை அறிந்து மனமுருகிய தலைவன் இறுதிக் கட்டளையிட்டு காத்திருக்கிறான். எல்லாமே இன்னுமின்னும் பாரமாய் இதயத்தை அழுத்தியது.

இப்போது இறுதிச் சண்டைக்கான நேரம் நெருங்கிவிட்டது. போராளிகள் தமது இறுதி நகர்விடத்தை சென்றடைந்துவிட்ட செய்தியை தொலைத்தொடர்பு சாதனம் சொல்லிற்று. ''தொடங்குங்கள' உத்தரவிட்டார் தளபதி. எதிரியின் தடைகளை ஒவ்வொன்றாய் கடக்கத்தொடங்கினார்கள் வீரர்கள். எறிகணைகளை மழைபோல பொழிந்தான் எதிரி; ஒவ்வொருவராய் மண்ணில் சாயத்தொடங்கினார்கள் வீராகள். இடைவிடாது தன்னை அழைத்தபடியேயிருந்த தளபதியின் குரலுக்கு பதிலளிக்க முடியாதபடி காயமடைந்து விழுந்தான அந்த அணியின தலைவன். தொடர்புகள் எதுவுமற்று வினாடிகள் கழிந்துகொண்டிருந்தன. எல்லோர் முகங்களும் பேயறைந்தது போலாகியது: எத்தனை நாட்களாய் நாங்கள் சுமந்த உணர்வின் சுமை இன்னும் அதிகரிக்கப் போகிறதா? அந்த ரத்தில் நிமிடங்கள் கழிந்தன.

''அண்ண அண்ண'' தளபதியை அழைத்த அந்தக்குரல் என்ன சொல்லப் போகிறது. எல்லோருக்குள்ளும் பேரார்வம் எழுந்தது. ''அண்ண பிரச்சனையில்லை நாங்கள் கொஞ்சப்பேர்தான் நிக்கிறம் எண்டாலும் கடைசிவரையும் விடமாட்டம்: உதவிக்கு ஆக்களை அனுப்புங்கோ நாங்கள் உள்ளுக்கு ஏறுறம் '' அந்தச்செய்தி இனித்தாலும் ஒருவர் முகங்களும். இன்னும் வெளிக்கவில்லை.

நிமிடங்கள் மணித்தியாலமாகி விட்டன. எதிரி நிலையினுள் புகுந்துவிட்டார்கள எமது போராளிகள். ஒவ்வொரு அங்குலத்திலும் எதிரியை சுட்டுச்சாய்த்தபடி அவர்கள் சற்று முன்னேறினார்கள். ''அண்ணை வலதுபக்கத்தால பெருமெடுப்பில வாறான் '' அந்தச் செய்தி, முறியடிப்பில் எதிரி கொண்டுள்ள உறுதியான தீர்மானத்தைக் காட்டியது. ''அது எங்கட உடல்களைக் கடந்துதான நடக்கும் ''கூறிவிட்டு எதிர்த்து நின்ற போராளிகளின் உதவியால் எதிரியின் பெருமுயற்சியை முறியடித்துவிட முடியுமா? முடிவிற்காய் நீண்ட நேரம் காத்திருக்கவேண்டியிருந்தது.

மணித்தியாலங்கள் ஒவ்வொன்றாய் கழிந்தன. போராளிகளின் உறுதியின் முன்னால் எதிரிகளின் முயற்சி ஆட்டம் காணத்தொடங்கியது. மீண்டும் அங்குலம் அங்குலமாய் போராளிகள் முன்னேறத்தொடங்கினார்கள். எதிர்த்துநிற்க முடியாதபடி எதிரியின் நாடி நரம்புகளுள் போராளிகள் உட்புகுந்துவிட்டாகள். எங்கள் இதயங்களின் பாரம் குறைவதாக இருந்தது: இன்னும் சிறிது நேரத்தில் எல்லோரும் காற்றில் பறந்து மிதந்துவிடப்போகிறோம் போலிருந்தது. அது நடந்தேவிட்டது.

O



www.eelamview.com

# "அதிர்ச்சிநோய் எமக்கல்ல"

'அதிர்ச்சிநோய் எமக்கல்ல': இது 1993ம் ஆண்டு வெளியான தமிழீழத்தின ஆன்றோனான நாக . பத்மநாதன் ஐயாவின் உருவகங்களுக்கான தலைப்பு. இத்தலைப்பும், இத்தலைப் பின்கீழ் வரும் உருவகமும தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் இன்றைய அதியுயர் வளர்ச்சிநிலை கண்டு பதறியடித்து பலவாறு பிதற்றும் சருவதேசத்திற்கு எவ்வளவு சாலப்பொருந்துகின்றது என்பதை சுட்டுவதே இக்கட்டுரையின் இலக்கு. இப் பிதற்றல்களை நாங்கள் தொகுத்தால் — — அயலிலுள்ள அதிகாரத்தோர் (தமிழீழம் அமைப்பதற்கு அனுமதிகோரி தமக்கு அனுப்பப்பட்ட விண்ணப்பதை நிராகரிப்பது போன்ற தொனியில்) தமிழீழம் அமைவதை அனுமதியோம் என்கின்றார்கள். அதிகாரத்தை அண்டி வாழ்வோர் அதற்கு முண்டு கொடுக்கும் ஊடக முதலாளியங்களைச் சார்ந்தோர் (சிறிலங்காவால் தமக்கு அனுப்பப்பட்ட வழக்கொன்றை விசாரிக்கும் நீதியாளர் போன்ற தொனியில்) தமிழீழம் அமைப்பது பாரிய குற்றம். அது பயங்கரவாதிகளின் பாதகச் செயற்பாடு என நீதி வழங்குகின்றார்கள். இன்னும் சிலரோ இதனையொரு பட்டிமன்ற - 'அரட்டை அரங்க' விவாதப் பொருளாக்கி விழலுக்கு நீர் இறைக்கின்றார்கள். உலகத்தின் தொலை இயக்கி தன்னிடமே இருப்பதாக கருதுவோரோ செத்த கிரகமொன்றில் தான் தமிழீழம் அமைவது சாத்தியம் எனக்கூறி தம்மாலும் நகைச் சுவையாக நாலு வார்த்தை உதிர்க்கமுடியும் என நிரூபிக்கின்றார்கள். இதற்கெல்லாம் காரணம் அவர்கள் அடிமனதில் அதிர்ச்சி நோயொன்று பரவியிருப்பதே என்பது எமக்குப் புரிகின்றது.

**- வே. பாலகுமாரன் -**

இவற்றிற்கு தக்க பதிலை மிகத் தெளிவாக புலிகளின் அரசியல் ஆலோசகரான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் கூறிவிட்டார். "சில குறிப்பிட்ட நோக்கங்களுக்காக அமெரிக்காவும் இந்தியாவும் இத்தகைய அறிக்கைகளை வெளியிட்டிருக்கலாம். இந்நாடுகளது பூகோள அரசியல் நலன்களையும் அச்சங்களையும் நாம் புரிவோம். அரசியல் சுதந்திரம் வேண்டித் தமிழர் நடத்தும் போராட்டத்திற்கு பாதகம் விளைவிக்கும் நோக்கில் இந்த அறிக்கைகள் வெளியிடப்பட்டதாக நாம் நினைக்கவில்லை. பேச்சுவார்த்தை மூலமாக ஒரு அரசியல் தீர்வுகாண இருதரப்பினரும் முயற்சி எடுக்க ஊக்கமளிப்பதற்காகவே இக்கருத்து வலியுறுத்தப்பட்டிருக்கலாம்.

தமிழரின் பிரச்சனைக்கு இறுதித் தீர்வு விடயத்தை நிர்ணயிக்கும் சக்தி அமெரிக்க வல்லரசிடமோ அன்றி இந்தியப் பிராந்திய வல்லரசிடமோ அல்லது சிறீலங்கா அரசிடம்மா இருக்கவில்லை. எமது தேசத்தின் அரசியல் அந்தஸ்தையும் தலைவிதியையும் தீர்மானிக்கும் சக்தியாக விளங்குவது எமது மக்கள்தான். தமிழீழ மக்கள்தான்" என உறுதிபட வலியுறுத்தி அவர் கூறியிருக்கின்றார். இதுவே தமிழீழ மக்களின் ஒருமித்த பதில். விடுதலைப் புலிகளின் அசைக்கமுடியாத அரசியல் நிலைப்பாடு. உலகம் உய்த்துணர வேண்டிய உயரிய கருத்து.

இப்படியிருந்தும் உலகம் எதற்காக பதறியடித்து பலவாறு அவசரகோல அறிக்கைகளை விடுக்கின்றது? பிரபல செய்தியேடுகள் உரியமுறையில் ஏன் விடுதலைப் போராட்ட வளர்ச்சியை பிரதிபலிக்கவில்லை? வெல்லப் போகின்றார்கள் என்பதுதான் இவர்கள் அதிர்ச்சி நோய்க்கு காரணமா? இத்தனை காலம் மௌனம் காத்தார்கள்; ஏறெடுத்தும் பார்த்தார்களில்லை; உலகை மறக்கவைத்துவிட முடியும் என நம்பினார்கள். ஆனால் ஆனையிறவு பெருந்தளவீழ்ச்சி தவிர்க்கமுடியாத உண்மையை-நிர்ப்பந்த நிலையையல்லவா தோற்றுவித்துவிட்டது. இங்கேதான் பெருத்த முரண்பாடொன்று அவர்கள் கருத்துக்களிலே தொக்கி நிற்பதை எவரும் உணரமுடியும். இவர்கள் முதலில் என்ன செய்திருக்கவேண்டும்? எவ்வாறேனும் புலிகளுடன் நேரடித் தொடர்பை ஏற்படுத்தி உரிய விபரங்களைப் பெற்று ஆனையிறவு தளவீழ்ச்சியின் அரசியல் இராணுவ பரிமாணங்களை யாழ் குடாவில் புலிகள் மீண்டும் காலூான்றுவதை பற்றி எழுதியிருக்கவல்லவா வேண்டும்? ஆனால் சிலவரிகள் இவை பற்றி எழுதிவிட்டு இவர்கள் என்ன செய்திருக்கிறார்கள்?

இவர்களின் கருத்துநிலை முரண்பாட்டினை இவர்கள் சொற்கள் மூலமே இங்கு நாம் வெளிப்படுத்தவிரும்புகின்றோம். நியுஸ்வீக் (மே 29) இதழில் "நீங்கள் சாகத்தான் வேண்டும்" என்கிற தலைப்பில் டக்ளஸ் தேவானந்தா என்கிற எம் மக்களுக்கு நம்பிக்கைத் துரோகமிழைத்தவரின் ("புலிகள் கொடியவர்கள்"), தயான் செயத்திலக்கா என்கிற சிங்கள பேரினவாதியின் ("புலிகள் மதச்சார்பற்ற தலிபான்கள்"), மனித உரிமைகளுக்கான பல்கலைக் கழக ஆசிரியர் என்கிற சோரம்போன சகுனிகளின் கருத்துக்களை அடியொற்றி கட்டுரை எழுதப்பட்டுள்ளது. றம்போ போன்ற அமெரிக்க மலினப்படங்களைப் பார்த்தே போராளிகள் பயிற்சி பெறுவதாக வேறு கேலிக்குரிய கருத்துக்களை விதைக்கின்றது, இக்கட்டுரை. ரைம் இதழின் யூன் 5 இதழோ எப்போதும் எவர்க்கும் ஏவல் செய்வதற்கே பிறப்பெடுத்திருக்கும் வரதராசப் பெருமாள் ("அவர்களுக்கு மக்கள் ஆதரவிருப்பதாக எவரும் கூற முடியாது. அச்சுறுத்தியே தங்களை அவர்கள் நிலைநிறுத்தியுள்ளனர்") கருத்தை முன்வைக்கின்றது; விடுதலைப்போராளிகளின் உயரிய ஆளுமை ஈகத்தை, உயிரை, உடலை பிறர்க்காக தற்கொடையாக்கும் தலைசிறந்த பண்பை எவ்வாறேனும் உலகின் கண்கள் முன்னே மறைக்க, குறைக்க இவர்கள் படும்பாடு பரிதாபத்திற்குரியது.

## இராணுவ மனிதாபிமானம்



கருத்தோவியம்; கி. ஓவியநாதன்

இவர்களது முரண்பாடுகள இங்கேதான் அம்பலமாகின்றன. இவர்கள் வெளிப்படுத்துவதுபோல தரக் குறைவான, பகுத்தறிவற்ற திரைப் படங்களை பார்த்து விடுதலைப் போராட்டத்தை நடத்துகிற ஒரு பயங்கரவாதஇயக்கத்தால் எவ்வாறு அதே ரைம் மே29யதிகதியஇதழில் சிறப்பித்து சிலாகித்துக்கூறப்படும் உயர் பண்புகளைப் பெற்றிருக்க முடியும்? எவ்வாறு பாரிய அரசியல் இராணுவ வெற்றிகளை அடையத்தக்க தான அமைப்பை கட்டியெழுப்பியிருக்க முடியும்? தினை விதையிலிருந்து பனை தோன்றுமா? ரைம் இதழ் ஒன்றின் பின் ஒன்றாக வியக்கும் புலிகளின் இயல்புகளைப் பாருங்கள் உயரிய வளர்ச்சி கண்ட நாடுகளில் விரும்பப்படும் அதியுயர் நகர்திறன் கொண்ட மரபுவழி இராணுவங்களின் மூலோபாயங்களை கையாளும் ஆற்றல் பெற்ற மிக இறுக்கமான தாக்குதல் அணியாக புலிகள் மாறி விட்டார்கள் — வெளிநாடுகள் பலவற்றிலிருந்து ஆயுதங்களை கொள்வனவு செய்து அவற்றினை தமதிடத்திற்கு நகர்த்தும் ஆற்றல் பெற்ற புலிகள், கனரக ஆயுததளபாடங்களான பீரங்கிகள, ராங்குகள், எறிகணைகள், துருப்புக்காவிகள் போன்ற தமக்கு முழுமையான தேவையில் ஆகக்குறைந்தது 60 விழுக்காட்டையாவது சிறிலங்கா இராணுவத்திடமிருந்தே கைப்பற்றிக் கொள்கின்றனர் சரிஅரைப்பங்கு பெண் போராளிகளைக் கொண்ட புலிகள் தமது போரியல் ஆற்றலில் ஒரு புதியபக்கத்தினைக் காட்டிநிற்கின்றார்கள் — தவறுகளிலிருந்து படிப்பினைகளை பெற்றுக்கொள்ளும் அற்புத ஆற்றல் வாய்ந்தவர்கள் ஒவ்வொரு தாக்குதல் திட்டமும் இம்மியளவும் பிசகாது நுட்பமாகத் திட்டமிடப்படுகின்றது. இதற்கு தேவையான தரவுகள் யாவும் துல்லியமாக பெறப்படுகின்றது. இடைவிடாது முடிவற்ற பயிற்சிகள், ஒத்திகைகள் மூலம் வெற்றியைத் தமதாக்கிக்கொள்கின்றனர். —

இத்தனை இயல்புகளையும் விபரிக்கும் அமெரிக்க ரைம் இவற்றிற்கெல்லாம் காரணம் வேலுப்பிள்ளை பிரபாகரனே என்கிறது. விவேகமும் எதையும் ஒழுங்கு முறையாக திட்டமிட்டு மேற்கொள்ளும் ஆற்றலும் வாய்ந்த இவர் உலகின் மிகவெற்றிகரமான பயங்கரவாத இயக்கத்தை நவீன இராணுவமாக மாற்றிவிட்டார்— —

இவ்வாறு வியப்புடன் 'ஆ' வென வாய் பிளந்து ஆய்வு செய்யும் இக் கட்டுரையிலே புலிகளை தவறாகப் புரிந்து கொள்வதன், குறைத்து மதிப்பிடுவதன் அபாயம் சுட்டிக்காட்டப்படுகின்றது. இந்தியா உட்பட அனைவருமே இத்தகைய பாரிய தவற்றினைச் செய்திருப்பதாக விபரிக்கும் அமெரிக்க ரைமும் தானும் அதே தவற்றினையே இறுதியில் செய்கின்றது. அமெரிக்க ரைம் இவ்வாறு தடுமாறுகையில் இந்தியாவின் புரொன்லைன்ட் ஏடோ ஒருபடி மேலேபோய் தனது மே 26 வெளியீட்டில் முகம் மலர்ந்து (இவர்கள் மனோவிகாரங்களை எள்ளி) நகைக்கும் தலைவர் படத்தை அட்டையில் வெளியிட்டு ஏறத்தாழ 20 பக்கங்களுக்கு ஆனையிறவுச்சமர், அதன் விளைவுகள் பற்றி சிறப்புவிளக்க கட்டுரைகளை வெளியிட்டு உள்ளது.

ஆனால் அதன் ஆசிரியர் என். ராம் வழமைபோல் தலையங்கத்தில் "வாந்தியெடுக்கின்றார்." தமிழீழம் பகற்கனவு - நாம்

→



www.eelamview.com

# சிப்பாய்களும் மன்னர்களே

"தம்பி உவனுக்கு துவக்கு வேணுமாம். இஞ்சவந்த நாள்தொடக்கம் ஒரே ஆக்கினை" அந்த தாயின் குரல் எம்மை திருப்பியது. "அம்மா, துவக்கு வேண்டித் தா" மூன்று வயதான சிறுவன் அடம்பிடித்துக்கொண்டிருந்தான்.

உக்கிய தென்னம் கிடுகால் வேயப்பட்ட கூரையின் மேல் நீலநிற தறப்பால் விரிக்கப்பட்ட பாடசாலையின் மண்டபத்தினுள் அந்தக் குடும்பம் இருந்தது. இன்னும் பலரது குடும்பங்களைப் போல.

சேலைகளாலும், படுக்கை விரிப்புக்களாலும் சுற்றி அடைக்கப்பட்டிருந்த பத்தடி வீட்டிற்குள் - இல்லை கூட்டுக்குள் தந்தை மரவள்ளிக்கிழங்கு உரித்துக்கொண்டிருந்தார். மூலையில் ஒரு அடுப்பில் சிறிய பானையில் தண்ணீர் கொதித்துக்கொண்டிருந்தது. தலைக்கு மேல் தொங்கிய கொடியில் உலர்ந்த ஆடைகளும், இன்னுமொரு மூலையில் கிடந்த உடமைகளும் அந்த அறைதான் அவர்களிற்கு எல்லாமே என்பதை சொல்லாமற் சொல்லின.

"தம்பிக்கு என்ன பெயர்" திடீரென எழுந்த வினாவால் பயந்துவிட்ட சிறுவன் மெல்லச் சொன்னான் "விஜயரூபன்." "பிள்ளைக்குத் துவக்கு வேணுமோ?" துவக்கு பற்றிய வினா அவனை நிமிரவைத்தது நம்பிக்கையுடன். "ஓம்" என்ற குரல் இப்போது உற்சாகமாக வந்தது. "தம்பிக்கு ஏனப்பன் துவக்கு?" "ஆமியைச் சுடோணும்!" கைகளை நீட்டிச் சுட்டுக்காட்டிய அந்த பதில் தீர்க்கமாய் இருந்தது. "ஏனப்பன் ஆமியைச் சுடோணும்?" அந்த சிறுவனின் சின்ன விழிகளில் ஏதோ இனங்காண முடியாத உணர்வுகள் மின்னியதாகப்பட்டது. "அவங்கள் அப்பாவைப் பிடிச்சுக்கொண்டு போறவங்கள். அடிக்கிறவை. அம்மா சாப்பிடாமல் அழுகிறவா. அதுதான் அவங்களைச் சுடோணும்."

அவன் சின்னவன்தான். ஆனால் அந்தப் பிஞ்சு உள்ளத்தில் எழுந்த உணர்வின் வீச்சு கடுமையாக இருந்தது. அடிக்கடி தந்தையைஇராணுவம் அழைத்துப் போன போதெல்லாம் அந்த வீடுபட்ட துயரமும், அவன் தாய் அடைந்த கலக்கமும், சுற்றத்தார் அடைந்த அவதியும் அவனுள் எப்படியான உணர்வை ஏற்படுத்தியதோ? அடிவாங்கிய காயங்களோடு தந்தை வீடு திரும்பியபோது அந்த வீட்டின் உணர்வலைகள் எப்படி இந்த குழந்தையின் மனதைத் தைத்திருக்குமோ? O

இரண்டு பிள்ளைகளைக் கொண்டதொரு சிறிய குடும்பம் அங்கே தங்கியிருந்தது. அவர்களும் இன்று அகதிகள்தான். சுற்றி அடைக்கப்பட்ட அந்த பாடசாலை மண்டபம் தான் அவர்களின் வாழ்விடம். தாய் வலைபின்னிக்கொண்டிருந்தாள். மதிய உணவாய் அவளுடைய சின்ன மகன் தேனீர் தயாரித்துக்கொண்டிருந்தான். வறுமை அங்கே குடிகொண்டிருந்தது. நான் தந்தையுடன் கதைத்துக்கொண்டிருந்தேன்.

"...நாங்கள் சிறுகடலில் தொழில் செய்யிறனாங்கள். கடலுக்கு விடமாட்டான்- விட்டாலும் இடைக்கிடை வந்து எங்களைப் பிடிப்பான். பிடிபடுறவைய சோடி சோடியா சேர்த்துவிட்டு ஒருவர்மாறி ஒருவருக்கு அடிக்கவிடுவான்." அந்த நாட்களை கண்ணீருடன் நினைவுகூர்ந்தார் யோசப் என்னும் யேசுராசா.

இந்த வார்த்தைகள் உங்களிற்குப் புரிகின்றதா? தங்களைத் தாங்களே அடித்துக் கொள்வதற்கு அவர்கள் யார்? தந்தையும் மகனும், மாமனும் மருமகனும், எனினும் அந்த வெறியர்களின் கொலைவெறிக்குப் பயந்து அவர்கள் அடித்துக்கொண்டனர். யாராவது ஒருவர் மயங்கிச் சரியும்வரையும் முகத்திலும், உடலிலும் இரத்தம் கசிய அடித்துக்கொண்டனர். செய்வதற்கு ஏதுமற்ற நிலையில் அவர்கள் அடைந்த வேதனைகளுக்கும் அப்பால் அவர்கள் அடைந்த அவமானம் உங்களிற்கு புரிகின்றதா?

விபரீதமான அந்த வக்கிர எண்ணம் கொண்ட ஆக்கிரமிப்பு இராணுவத்தின் கொடூரமான ரசிப்புத் தன்மையை சொல்லும்போது அவமானத்தால் தலைகவிழ்ந்து கண்கள் கலங்குகின்றன அவருக்கு. அவர்களைப் பார்க்கும்போது அடிமைகளை ஆயுதங்களால் அடிபடவிட்டு, சாவதை பார்த்து ரசித்த ஆயிரம் ஆண்டுகளிற்கு முந்தைய ஆண்டான் அடிமை வாழ்வு முறைதான் என்நினைவில் வருகின்றது. அடிமை மனிதர்களை மோதவிட்டு, அவர்கள் உடல்பிழந்து, உயிரிழந்து மடிவதை மன்னன் மனைவியுடன் பார்த்து ரசித்தான். அதுவே அவனது பொழுதுபோக்கு. யாழ்ப்பாணம் ஆண்டான் அடிமை சமுதாயமாயிற்றா? அன்று அடிமைகளுக்கு இருந்ததோ ஒரு மன்னன்தான். ஆனால், இன்று அற்பம், சிங்களச் சிப்பாய் என்ற தகுதியில் எத்தனை மன்னர்கள்! O

எனது கால்கள் தொடர்ந்து நடக்கின்றன.

"தோமஸ் ஐயாவிற்கு எந்த இடம்?" "சாவகச்சேரி தம்பி" "எங்கை ஐயா வேலை செய்தனிங்க?" "நான் முந்தி அனுராதபுரத்தில ரெயில்வே டிப்பாட்மண்டில வேலை செய்தன். எழுபத்தேழில நடந்த கலவரத்தில சிங்கள காடையரிட்ட வெட்டு வாங்கினனான். வயித்தில பெரிய காயம். இண்டைக்கும் தம்பி மலசலம் போறதெண்டால் கஸ்ரம்." "ஏன் ஐயா, அப்பத்தய சிங்களக் காடையருக்கும் இப்பத்தய ஆமிக்கும் என்ன வித்தியாசம்?" எல்லாம் ஒண்டுதான் அப்ப கத்தியோட வந்தவங்கள், துவக்கோட இப்ப திரியிறாங்கள். அப்ப வெளியில தெரியக்கூடியதா செய்தத இப்ப தெரியாமல் செய்யுறாங்கள். அப்ப இவங்களுக்கு எங்கட நகை நட்டுகள்தான் கிடைச்சது. இப்ப இவங்களுக்கு சம்பளமும் கொடுக்கிறாங்கள்."

தமது இறுதியான கொடூரத்தை அப்போதுதான் பிரயோகித்தனர். தனக்கு கவசமாக மக்களை

**- அன்பு -**

இராணுவம் அமைத்துக்கொண்டது. பின் இராணுவம் பின்வாங்கியபோதெல்லாம் தன் தோல்வியின் அவமானத்தை அந்த மக்கள் மீதே தீர்த்துக்கொண்டது.

"இயக்கம் மட்டுவிலுக்கு வந்திட்டுது. அப்ப நாங்கள் கனகம்புளியடியிலிருந்து மட்டுவிலுக்குவர வெளிக்கிட்டம். கனகம்புளியடிச் சந்தியில் வைச்சு ஆமிக்காரன் மறிச்சவன். தங்கட காம்புக்கு பின்னாலபோய் இருக்கச்சொன்னாங்கள். இல்லையெண்டு நாங்கள் வெளிக்கிட றோட்டுக்கு குறுக்க ரக்டரை விட்டிட்டு கடந்துபோனா சுடுவம் எண்டாங்கள். நாங்கள் கனபேர் கடைசியில இருந்தாலும் சாகத்தானே போறமெண்டிட்டு 'சுடுறதெண்டா சுடுங்கோடா' எண்டுபோட்டு றோட்டுக் கரையால காணியால நடந்தம். இஞ்சால வந்தவுடன் நாங்கள் தங்கியிருந்த வீடுகளுக்கு செல்லடிக்க வெளிக்கிட்டான். எங்கள்ள கனபேருக்கு கயாம்.



## ஊர் எதிரியிடம்! உறவுகள் எங்கெங்கோ!

தோமஸ் ஐயாவிற்கு அறுபது வயது. அவரைப்போன்ற அனுபவம் எங்கள் சமூகத்தில் நிறையப்பேருக்கு உண்டு. அன்று தமது இளமைப் பராயத்தில் வாழ்வுதேடிச் சென்றபோது தென்னிலங்கையில் வெட்டப்பட்டவர்கள் இன்று தம் முதுமைப்பராயத்திலும் வாழும் உரிமை மறுக்கப்பட்டு சொந்த வீட்டில் வைத்தே சுடப்படுகின்றனர். தன் வாழ்நாள் முழுவதும் சிங்களம் தந்த வடுக்களைச் சுமப்பது உடலில் மட்டுமல்ல மனதிலும்தான். O

ஆலமரத்தடியில் அமர்ந்திருந்த இளம் குடும்பஸ்தர்களுடன் நான் சேர்ந்துகொண்டேன். தென்மராட்சி நகரப்பகுதியிலிருந்து இராணுவம் வெளியேறிய அந்த நாட்களை இவர்களால் மறக்கமுடியவில்லை. ஆக்கிரமிப்பாளர்கள் இவர்கள் மீது

ஒன்றிரண்டுபேர் மருந்தில்லாம இரத்தம்போய் செத்துப் போட்டினம்.

இது நடந்தது சாவகச்சேரியைவிட்டு இராணுவம் பின்வாங்கி ஓடியபோது. தமது பாதுகாப்பிற்கான உயிர்க் கேடயங்களாக பயன்படுத்தப்பட்ட மக்களின் உயிர்களே பின்னர் அவர்களால் கொல்லப்படவேண்டிய இலக்குகளாயின.

அந்த முகாமில் நான்கேட்ட கதைகள் மனதை உலுக்குபவை. ஆக்கிரமிப்பாளர்கள் அளித்த கொடிய வடுக்கள் நிறைந்ததாய் அவர்களின் வாழ்வின் கதையிருந்தது. இதற்குமேல் அந்தக் கதைகளைக் கேட்பது என் மனதைக் குடைந்து உயிரை வதைத்து விடும் போலிருந்தது- "அம்மா போட்டுவாறன" என்று சொல்லி நடக்கத்தொடங்கினேன். O

---

அனுமதியோம் - இந்தியாவிற்கு பெரும் தீங்கு என மாயக்கருத்துக்களை உற்பத்தி செய்கிறார். யாரிந்த ராம்? இவருக்கும் எமது விடுதலைப் போராட்டத்திற்கும் என்ன சம்மந்தம்? "வெய்யில் படாத" - 'வீதிக்கு இறங்காத' - "மேட்டுக்குடி சாய்வுநாற்காலி புகழ்" ராம் மாக்சை, மனிதநேயத்தையே குழிதோண்டிப்புதைக்கிறார். இவர்களின் இத்தகைய மிக மாறுபாடான போக்குகள் பல வினாக்களை எழுப்புகின்றன? பகுத்தறிவற்ற ஒரு பயங்கரவாத இயக்கம் வீறுடன் எவ்வாறு விடுதலைப்போராட்டத்தினை நடத்த முடியும்? எவ்வாறு நவீன மரபுவழி இராணுவமாக மாற்றமடைய முடியும்? தவறுகளிலிருந்து பட்டறிவைப் பெறும் ஒரு விவேகி எவ்வாறு பயங்கரவாதியாக முடியும்?

இவற்றிற்கெல்லாம் என்ன காரணம்? எவரும் குழம்பத்தேவையில்லை. அன்றே இதற்கான பதிலை நாக. பத்மநாதன் அவர்கள் கூறிவிட்டார்கள். தத்தளிக்கும் மனித உள்ளமும் அதற்கு உறுதி கூறும் குரலொன்றுமாக இவ்வுருவகம் நகர்கின்றது ........

"அடிக்க வருவதை நீ அடி! கொல்ல வருவதை நீ கொன்றுமுடி! வாழ்வுக்கு வேண்டிய வழியும் - நெறியும் - பொய்யாமொழியும் இது தான்!" எனத் தொடர்ந்து முழங்கிற்று அக்குரல்;

வானமும் இதனையே எதிரொலித்து ஓய்ந்தது.

புதிய உயிரோட்டமொன்று தன்னுள் எழுவதை தத்தளித்து நின்ற மனம் (எம்மக்கள்) உணர்ந்தது. அது விழிப்பாக வீர உணர்ச்சியாக உதிரத்துள் செறிந்தது என்ன ...? முன்பு பயந்து நின்ற மனதை இப்போது அங்கு காணவில்லை. வீர மனிதனொருவன் அங்கு தலைநிமிர்ந்து நின்றான். காலவேகத்தில் நொடிப் பொழுதில் ஒன்று, நூறு, ஆயிரம் ஆகின! விடுதலை வேண்டும் இனமொன்று அங்கு கரம் உயர்த்தி நின்றது. புதிய வரலாறே உருவாகி நின்றது.

"அதிர்ச்சியும் பயமும் எமக்கல்ல! அவையும் - அழிவும் - எம் பகைவனுக்கே!" என்ற விடுதலையின் விளக்கம் அங்கு ஒலித்துக்கொண்டிருந்தது!" O



www.eelamview.com

# வாழும் நாடுகளில் நின்றவாறு வல்லமை தருவீர்

**வை**கறையில் ருதுவுறும் வாசல் மரமாய்
சௌந்கர்யம் தழுவி
எம் வாழ்விருந்தது அன்று.
கையணைப்பில் கசிந்தது உறவு.
சொந்தம் முழுமையும் சந்தித்துத் திரும்ப
ஒருபகலும், ஒருசைக்கிளும் போதும்.
அடைக்கோழி மடியாய் ஜீவிதம் அருகிருந்தது.
இழவு வீடெனில் ஊரேகூடியிருந்து இரங்கும்.
உறவுகள் கதறும்.
செத்தது பாவனையற்றிருந்த பழசெனினும்
கத்தியழுது கண்ணீர்விடும் இரத்த நூலிழை.
மச்சாளின் கொலுசுச் சத்தத்தையே
செவிக்குள் பொத்தி
உயிரிழை பின்னுவான் மச்சான்.
மச்சானின் கைபட்ட மண்வெட்டியை
கைதொட்டுக் கண்ணிலொற்றுவாள் மச்சாள்.
ஒன்றுக்குள் ஒன்றான உறவுக்குள்ளே
ஊரெங்கும் ஆனந்தம் பூத்துக் கிடந்தது.
எல்லாமுமின்று மாயக்கண்ணாடிபோல மறைந்துவிட்டது.
ஒட்டிக்கொள்ளும் பசையற்ற உறவாக
நிலைக்கொன்றாய் சிலும்பிப்போனது வாழ்வு.
யாழ்ப்பாணம் வேரிழுத்துக்கொண்டு வெளியேறி விட்டது.
சில அல்லிவேர்கள் மட்டும் அங்கு ஆடுகின்றன.
வன்னியில் மட்டும் என்னவாம்?
அவலமும், அந்தரிப்புமாக ஆசுவாசமற்ற அகாலம்.

## உலைக்களம்

-- வியாசன் --

பேருக்கு மட்டும் புரங்களும், குளங்களும்
ஊரெதுவும் ஊராக இல்லை.
மன்னாரென்ன?
மட்டக்களப்பென்ன?
திருமலையென்ன? தீவகமென்ன?
எல்லாமே சாக்குருவிப் பாடலுடன்தான் சயனம்;
சரியான வடிவத்தில் எந்தச் சரீரமுமில்லை;
தலையிருக்குமிடத்தில் காலும்
காலிருக்குமிடத்தில் தலையுமாக
கண்டதுண்டமாகக் கிடக்கிறது தேசத்தின் நாளாந்தம்.
வயல் வரம்பில் நடந்த வாழ்வும்,
நிலவொளியில் கிடந்த மகிழ்வும்,
எமமைப் பிரிந்து எத்தனை வருடங்கள்?
உறவுகள் ஒவ்வொன்றாய் வற்றி காய்ந்து கிடக்கின்றது
எங்கள் விழுதெறிந்த கொடியின் வாய்க்கால்.
ஆலமரமும், ஐயனார் கோவிலும்
கோல உடையும் கூத்துமாக கிடந்த வாழ்வை
வேரறுத்து வீசியெறிநது விட்டனர்.
தொன்மக்குடிகளின் தொண்டையிற் சுருக்கிட்டு
லாலாநாட்டு இராசாக்களின் வம்சம்
சந்தோஷிக்கிறது.
இந்தமண்ணின் புழுதிபடிந்த சொந்தமக்களை
வந்த குடியின் வம்சம் வறுத்தெடுக்கிறது.
இரவு வந்தேறி ஊரைவளைத்து,
அதிகாலையானதும் குரல்வளை நெரித்து,
கொண்டேகிய மரநாய்களுக்கு அஞ்சி
குஞ்சுகளைத் தூரமரங்களுக்குத் துரத்தினோம்;
குண்டதிர்வில் குடல் கிழிந்தன போக
எஞ்சினவும் எங்கெங்கோ போயிறங்கின;
தாய்மடியின் சூடின்னும் அகலாச் சந்ததியே!
புலம்பெயர்ந்து போன பிள்ளைகளே!

சமுத்திரங்களைக் கடந்து,
நீண்ட நிலப்பரப்புக்களைக் கடந்து,
தாண்டிப்போய் எங்கெங்கோ தஞ்சமடைந்துள்ளீர்
ஆணிவேரை நீங்கள் அறுத்தவரல்லர்.
நாங்கள் தான் உம்மை அனுப்பிவைத்தோம்.
நீங்கள் சிறகெடுக்க விருப்பமற்றிருந்தீர்
நாங்கள்தான் தாலி விற்று,
தாய்க்காணி ஈடுவைத்து,
போவீரென உலுப்பிப் போக வைத்தோம்.
'' அன்னைமடிவிட்டு அகலேன் '' என
நீங்கள் அடம்பிடித்த போதும்
'' சொன்னதைக் கேள்மகனே '' என்று
துரத்தி வைத்தவர் நாங்கள்தான்.
கையசைத்துப் படலை தாண்டிய போது
கண்ணீர் வடித்தீர்.
'' விருப்பமில்லையம்மா போக '' என விம்மினீர்.
அந்தரித்துப் போவோமென அறிந்தும்
அவர்களாவது வாழட்டுமென்றுதான் அனுப்பினோம்.
நீங்கள் போன பின்பும் ஊர்கள் எரிந்தன.
உறவுகள் பிரிந்தன.
மண்கொள்ளையாக மரணங்கள் நிகழ்ந்தன.
எமனுடனான யுத்தம் இன்னும் தொடர்கிறது.
எம்மைக் காக்கவும்,
எமக்காகப் போரிடவும் இந்திரஜித்துக்கள் பிறக்கின்றனர்.
அபிமன்யூக்கள் அவதரிக்கின்றனர்.
கொல்லவருவோரைக் கொல்வோமென
சடாயுவின் சந்ததி சத்தியம் செய்துளது.
அர்ச்சுனன் அவதரித்துள்ளான்.
எதுவரினும் தளரேனென
பீஷ்மன் காலத்தைக் கடந்தும் காத்திருக்கின்றான்.
சதுரங்க காய்களை நகர்த்தியவாறு
மீண்டும் இளமைமிடுக்கோடு பிரம்மஞானி.
சங்கிலி மன்னனது தலைப்பாகை கிடைத்துளது.
பண்டாரவன்னியனின் பட்டுக்குடையும், பாதக்குறடும்
கண்டெடுத்து விட்டோம்.
நந்திக் கடலில் குருவிச்சி நாச்சியாரின்
காற்சிலம்பு கிட்டிற்று.
ஆனையடக்கிய அரியாத்தை மீண்டும் பிறந்துள்ளாள்.
இழந்ததனைத்தும் எமக்காகுமெனும்
நம்பிக்கையில் இன்றெம் நாட்கள்.
புலம்பெயர்ந்து போன பிள்ளைகளே
நலம் பெறுவீர்.
பனிவிழும் தேசமோ? பாலைவனமோ?
எங்குளீரென்றும் எமக்குத்தெரியாது?
கனிதருமரமாய் காய்த்துள்ளீரோ?
காய்ந்து கிடக்கின்றீரோ?
யாதுமறியோம் யாம்.
என்னும்
உமக்கொரு கடனுண்டென மட்டும்
உரைததல நம்கடன்.
இது உம்தாய்மடி;
இங்கு பெறும் வெற்றி உமதே;
தோல்விவரின் அதுவும் உம் தோள்களுக்கே.
எங்கெங்கு சிறகெடுத்துப் பறக்கினும்
திரும்பும்கூடு இங்குள மரத்திலெனத் தெரிக.
தாயின் சுகத்துக்கு ஈடேது?
விடுதலைக்காக வெந்துகொண்டிருக்கின்றோம்.
எதிரி எல்லா வழிகளையும் அடைத்துள்ளான்.
மூச்சுத்திணறுகிறது.
வாழும் நாடுகளில நின்றவாறு வல்லமைதருவீர்;
வீதிகளிலிறங்கி விடுதலைக்குக் குரலிடுவீர்;
அள்ளித்தருவீர்.
ஆயிரம் கரங்கொண்டெம்மை அணைப்பீர்.
நாளை உமக்கான தேசம்
உருவாகும் நேரம்
கவசகுண்டலங்களாயினும் கழட்டித்தருக;
நாளை உம் நாமமுரைத்தே
எம் தேசக்கொடி ஏறும்;

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்